# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஐப்பசி 1 | ஷவ்வால் 22 | (17-10-76) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 51


## பேச்சுவார்த்தைகளால் விடுதலைப் பயணம் தடைப்படும்!

### திருச்செல்வம் எச்சரிக்கை

"தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பேச்சுவார்த்தைகளுக்கு, இடமுண்டா? அதனால் பயனுண்டா? நமது இலட்சியப் பயணம் இதனால் தடைப்படாதா? என்றெல்லாம் தமிழ் இளைஞர்கள் கேள்வியெழுப்புவதில் அர்த்தம் உண்டு. பேச்சுவார்த்தைகள் நமது விடுதலைப் பயணத்துக்கு தடைபோடலாம். எனவே தமிழ்த்தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வைக்குள் ஏமாந்துவிட மாட்டார்கள். எமது விடுதலைப் பயணத்தை எவரும் இடைநிறுத்திவிடக் கூடாது!"



—திரு. எம். திருச்செல்வம் கியூ. சி. பொத்துவில் கருத்தரங்கில் இவ்வாறு கூறினர்.

—4-ம் பக்கம் பார்க்க

# தமிழ் ஈழம் அமைப்பதற்கு பூரண அதிகாரம்!

### தமிழ் பேசும் மக்களிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரும்!

தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வதற்கான பூரண அதிகாரத்தை தன்னிடம் ஒப்படைக்கும் படி தமிழ் தேசிய இனத்திடம் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரவிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்த பொதுத்தேர்தலைப் பயன்படுத்தவிருப்பதாகத் தெரிகிறது. இன்றைய பங்களாதேஷாக விளங்கும் முன்னைய கிழக்கு பாகிஸ்தானில் அவாமி லீக், சுயாட்சிக்கொள்கையை முன்வைத்துப் போட்டியிட்டு அந்தக் கொள்கைக்கு வங்க மக்களின் பூரண ஆதரவைப்பெற்றதுபோல — தமிழ் ஈழத்தை நிறுவுவதற்கான அதிகாரத்தை அடுத்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்பேசும் மக்களிடமிருந்து கோரவிருக்கிறது.

1975ம் ஆண்டு நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழ் ஈழக் கொள்கைக்கு கிடைத்த அங்கீகாரம்போல, அனைத்துத் தமிழீழத்திலும் தமிழ்ஈழக் கொள்கைக்கு அங்கீகாரத்தையும் தமிழ் ஈழத்தை நிறுவுதற்கான அதிகாரத்தையும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பெறுவதற்கு அடுத்த பொதுத் தேர்தலை ஒரு வாய்ப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி பயன்படுத்தவிருக்கிறது.

பொதுத்தேர்தல் ஒன்று திடீரென நடைபெற்றால்—அதில் தமிழர் விடுதலைக்கூட்டணி முன்வைக்கவிருக்கும் தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பதற்கு உபகுழு ஒன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு நியமித்திருக்கிறது. இக்குழுவில் திருவாளர்கள் நாவலர் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், சி. கதிர

—5-ம் பக்கம் பார்க்க

## "பேசாலையில் மீன் பிடிப்பதற்கு வெளியார் அனுமதிக்கப்படக் கூடாது!"

## இன்றேல் வழக்குத் தொடருவோம்!

### அரசாங்க அதிபருக்கு ஜெயக்கொடி அறிவிப்பு!

'பேசாலை கடற்கரையில்' வெளியிடங்களைச் சேர்ந்தோருக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதனை உடன் நிறுத்த வேண்டும், இல்லையேல் உடன் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று உடுப்பிட்டி பா. உ. திரு. ஜெயக்கொடி மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.



'பேசாலைக் கடற்கரையின் மேற்குப் பகுதியில் உள்ள இலையகல்லுப்பாடு, இறங்குதுறைப்பாடு, கிழக்குப்பகுதியில் உள்ள மறு எல்லைக் கல்லுப்பாடு, அல்லாபிச்சைப்பாடு ஆகிய இடங்களுக்கு இடையில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் மன்னார் மாவட்டத்தைத் தவிர்ந்தோர் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, பேசாலைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். 'ஆகையால் இவ்விடங்களில் வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கக்கூடாதென ஆட்சேபம் தெரிவிக்கிறேன். அப்படியில்லாது வெளியிடங்களைச் சேர்ந்தோர் இப்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டால் உடனடியாக அதனை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்படும்' என்று திரு. ஜெயக்கொடி மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

## சட்டத்தரணியாக கரிகாலன் சத்தியப்பிரமாணம்!

திரு. ச. நவரத்தினம் (கரிகாலன்) எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுக்கவிருப்பதை நண்பர்களுக்கு அறியத்தருகிறார்.



## தமிழ் மக்களின் உணர்ச்சியின் மொத்த உருவம் அமிர்தலிங்கம்!

Mr. Amirthalingam is an organic embodiment of the feelings and aspirations — however misguided— of the bulk of the Tamil people"

—"Socialist Nation" (8-10-76)

"தமிழ் மக்களின் அபிலாஷைகளினதும், உணர்ச்சிகளினதும் சக்திவாய்ந்த கூட்டு மொத்தஉருவமாக திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் விளங்குகிறார்!

'—சோசலிஸ்ட் நேஷன்' (சமசமாஜக்கட்சியின் ஆங்கில ஏடு) 8-10-76 இதழில்—

## "அரசியலமைப்பு, அவசரகாலச் சட்டம்பற்றி கொல்வினின் அன்றைய கருத்தை குறிப்பிட்டால் அவரது இன்றைய கருத்தையும் குறிப்பிடவேண்டும்!"

### உயர் நீதிமன்றத்தில் ஜீ. ஜீ.

அரசியல் நிர்ணய சபையில் அப்போது அரசியலமைப்புச் சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டம் பற்றியும் அவசரகாலச் சட்டம்பற்றியும் தெரிவித்த கருத்துக்களை இந்த நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் வாசித்துக் காட்டுவதாக இருந்தால் ட்ரயல்-அற்-பார் நீதிபதிகளின் தீர்ப்பின் பின்னர் அண்மையில் தேசிய அரசுப்பேரவையில் இது சம்பந்தமாக அவர் தெரிவித்திருந்த கருத்துக்களையும் இங்கு எடுத்துக் கூறவேண்டும். அப்போதுதான் பொருத்தமாக இருக்கும்!"

இவ்வாறு உயர்நீதிமன்றத்தில் கூறினர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம். அவசரகாலச் சட்டம் செல்லுபடியற்றது என்ற ட்ரயல் - அற் -பார் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் ஏகமனதான தீர்ப்பைஆட்சேபித்து சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில்சமர்ப்பித்துள்ள மீளாய்வு மனு கடந்த 13-10-76 புதன் கிழமை காலை 9-30 மணிக்கு பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில்



விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் தமது வாதத்தை ஆரம்பித்தார். அவரது வாதத்தின்போது குறுக்கிட்டுப்பேசுகையிலேயே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற விசாரணை ஆரம்பமானபோது 4வது பிரதிவாதியான திரு. அ. அமிர்தலிங்கமும், பண்டிதர் இரத்தினம், க. துரைரத்தினம், வி. என். நவரத்தினம ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். தமிழ்த் தலைவர்களின் சார்பில் வாதாடுவதற்கு சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி., மு. திருச்செல்வம் கியூ. சி., எஸ். நடேசன் கியூ. சி., முன்னுள் உதவி சொலி

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். பொன்னுத்துரை
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழ இலட்சியத்துக்கு ஆதரவு தருவதாக வெளிப்படையாகக் கூருமல், தமிழின உரிமைகளுக்காக பாடுபடும் இயக்கங்களுக்கு ஆதரவு தருவதென்று தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் தீர்மானம் எடுத்திருப்பது எதைக் காட்டுகிறது?

ப: தமிழாசிரியர்கள் மத்தியில் இன்னும் கோழைத்தனமும் அச்சமும் குடிகொண்டிருப்பதையே காட்டுகிறது! எனினும் இந்த அளவுக்காவது துணிவுடன் முன்வந்து தீர்மானம் எடுத்ததற்காக அவர்களைப் பாராட்டலாம்!... தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையில் தமிழாசிரியர்கள் இன்னும் கூடுதலான தெளிவு பெறவேண்டும்!

கே: தமிழீழம் பிரிந்தால், தமிழீழத்துக்கு வெளியேயுள்ள தமிழ் மக்களின் நிலையென்ன என்று, கேட்போருக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

ப: அவர்கள் எந்நேரத்திலும் தமிழ் ஈழத்துக்கு திரும்பிவந்து விவசாயத்திலும் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபடலாம்; அதற்கு தமிழ்ஈழ அரசு சகல உதவிகளையும் அளிக்கும்; அல்லது தங்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு சுதந்திரமான தமிழ் ஈழ அரசு அருகிலேயே இருக்கிறது என்கிற துணிவுடன் சிங்கள நாட்டிலேயே அந்நாடு அனுமதித்தால் தொடர்ந்தும் வாழலாம்; நாடு பிரிந்த பின்னரும் சிங்கள நாட்டில் தமிழர்களும், தமிழ்ஈழத்தில் சிங்களவர்களும் கலந்து வாழத்தான் செய்வார்கள்! இது தவிர்க்க முடியாதது; ஆனல் தமிழ் ஈழத்தின் அரசுரிமை தமிழ் பேசும் மக்கள் கையிலும், சிங்களத்தின் ஆட்சி சிங்களவர்கையிலும் இருக்கும்; அதே சமயம் இரு இனங்களுக்கும் பரஸ்பரம் பாதுகாப்பும் இருக்கும்! பாகிஸ்தானைவிட, பாகிஸ்தானுக்கு வெளியே முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்த போதிலும் அந்த ஒரு காரணத்துக்காக பாகிஸ்தான் கோரிக்கையை ஜின்னு கைவிட்டதில்லையே!

ஃ

மு. சுந்தரம்.
சுன்னுகம்,

கே: சோசலிசம் மூலமே தமிழர் தனித்தன்மை காக்கப்படும் என்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் குமாரசூரியர் கூறியிருப்பதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: 1970ஆம் ஆண்டும் இதே சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் ஒரு கூட்டத்தில் குமாரசூரியர் பேசினர். அப்போது பல்கலைக்கழகத் தெரிவில் மொழிவாரித் தரப்படுத்தல் வரவே வராது என்றும், திறமையடிப்படையே தொடர்ந்து பின்பற்றப்படுமென்றும், அதில் மாற்றம் ஏதாவது ஏற்பட்டால் தான் உடனடியாக ராஜினமா செய்துவிடுவேன் என்றும் குமாரசூரியர் அக்கூட்டத்தில் கூறியிருந்தது இன்றும் நினைவில் இருக்கிறது. ஆனல் அதன்பின்னர்கடந்த 6 ஆண்டுகளாக திறமை அடிப்படை பின்தள்ளப்பட்டு மொழிவாரித் தரப்படுத்தல் திணிக்கப்பட்டு, தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகக்கல்வி பறிக்கப்பட்டுவருகிறது. இதையே குமாரசூரியர் 'சோசலிசம்' என்று கூறிக்கொண்டு அமைச்சர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறர். குமாரசூரியரின் 'சோசலிசத்தை' இன்னும் நீங்கள் நம்புகிறீர்களா?

ஃ

ராஜன்,
கிளிநொச்சி

கே: தமிழ் ஈழம் அடைய முடியாத இலட்சியம் என்றும் அதற்காக போராடிப் பயனில்லையென்றும் அரையமைச்சர் ஒருவர் எங்களூருக்கு வந்து கூறியிருக்கிருரே...?

ப: அடைய முடியாத இலட்சியம் என்று எதுவும் கிடையாது; நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் சந்திரமண்டலத்துக்கு போவது அடைய முடியாத இலட்சியம்; ஆனல் இன்ரு மனிதன் சந்திரனுக்கு சென்று திரும்பி விட்டான். பாகிஸ்தான் தனிநாடாக வேண்டும் என்று கவிஞர் இக்பால் முதன்முதலாக கூறியபோது, அவரைப் பல முட்டாள்கள் சேர்ந்துகொண்டு, அடையமுடியாத இலட்சியம்பற்றிக் கனவு காண்கிருன், பைத்தியக்காரன் என்று ஏளனம்பேசினர்கள். ஜின்னுகூட கவிஞர் இக்பாலை பரிகசித்தார். பின்னர் அதே ஜின்னுவே பாகிஸ்தானை உருவாக்கினர். சதா மயக்கத்தில் இருக்கும் அந்த அரை அமைச்சருக்கு இந்த வரலாற்று உண்மைகள் எங்கே புரியப்போகின்றன?

ஃ

இ. விக்னராஜா சர்மா,
சுதுமலை மேற்கு.

கே: குமாரசூரியர் பிரதமராக வந்தால்...?

ப: அதன் பின்னர் பொதுத்தேர்தலே நடக்காது! காளைமாடு குடைக்கு வெருளுவது போல தேர்தல் என்ருல் அவ்வளவு பயம் குமார சூரியருக்கு!

பொ. மதிவாணன்,
கடைத் தெரு,
சிலாபம்.

கே: தமிழ்ஈழம் அமைக்கப்பட்டால், எங்களைப் போன்ற இலங்கை பிரஜாவுரிமை பெற்ற தமிழர்களின் நிலை என்ன?

ப: தமிழ் ஈழத்தின் குடிமக்களாகி பூரண பிரஜாவுரிமையுடன் தலை நிமிர்ந்து வாழலாம்!

ஃ

ஞா. பழனித்தம்பி,
வன்னியா வீதி,
களுதாவளை.

கே: தி. மு. க. அமைச்சரவை கலைக்கப்பட்டபோது என்ன நினைத்தீர்கள்?

ப: மற்றவர்கள் நினைத்தவுடன் கலைக்கக்கூடிய அளவுக்கு தமிழ் நாட்டின் சுதந்திரம் கட்டுப்பட்டுக்கிடக்கிறதே யென்று கவலை கொண்டேன்!

ஃ

தேவன்,
மட்டக்களப்பு.

கே: யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான், என்ற விஷவித்தை மட்டக்களப்பில் மீண்டும் விதைப்பதற்கு சிலர் எடுத்துவரும் முயற்சிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா?

ப: கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த சக்திகளையும் நன்ருக அறிவேன். ஆனல் இந்தப் பிரிவினை சக்திகள் எங்கிருந்தாலும் அதை மூட்டைப்பூச்சிபோல நசுக்கிவிட மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் தயாராகிவிட்டார்கள். பிரதேச, மாவட்டப் பிரிவினைகளையெல்லாம் கெல்லியெறிந்து ஒன்றுபட்டுவிட்ட தமிழினத்தை பிரிப்பதற்கு யாரையும் தமிழ் இளைஞர்கள் இனி அனுமதிக்கமாட்டார்கள்!

ஃ

வ. க. சிவரெத்தினம்
ஆவரங்கால்

கே: இறைவன் உங்களுக்கு முன் தோன்றி ஒருவரம் தருகிருன். ஆனல் அதற்கு ஒரு நிபந்தனை விதிக்கிருன்; என்னவென்ருல், தமிழ்ஈழம் தருவேன், அதற்குப் பதிலாக உமது உயிரை பலியெடுப்பேன் என்று கூறுகிருன்; அப்போது என்ன சொல்வீர்கள்?

ப: 'எனையீன்றதந்தைக்கும் தாய்க்கும் மக்கள் இனமீன்ற தமிழ் நாடு தனக்கும் என்னுல் தினையளவு பயனேதும் நேருமென்ருல் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்' என்ருன் புரட்சிக்கவிஞன். தினையளவு பயனுக்கே அவன் உயிர்கொடுக்கத் தயாராக இருக்கும் போது தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காக எனது உயிரைத்தருவதும், அதற்கு என்னைத் தேர்ந்தெடுத்திருப்பதும் நான் செய்த தவப்பயன் என்று இறைவனிடம் கூறுவேன்!

> **திருவாளர் குயுக்தியார்,**
> 194 ஏ. பண்டாரநாயகா வீதி.
> கொழும்பு-13.

## சாவு நன்று!

என்னைப் போலொரு மானிடன என்னை
எப்படித் தாழ்த்தலாம் தோழா?—அவன்
அன்னை போலவே என்னையும் அன்னை
ஆக்கினள் நானென்ன கீழா?

ஆணை செலுத்தவும் ஆளவும் இங்கே
ஆவி அவன் எடுத்தானு?—பிச்சைப்
பானை ஏந்திய கையனுய் இந்தப்
பாவி பிறந்து வந்தேனு?

காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்!
களிப்பினில் என்னை மறந்தேன்!—இன்பம்
ஏற்று மறுபொழுதென்கரம் பார்த்தேன்!
இருகை விலங்கோடிருந்தேன்!

அஞ்சி நடுங்கியும் நெஞ்சம் பதைத்தும்
ஆயுள் கழிந்தது தோழா!—உயிர்
கொஞ்சம் இருந்தது... கூறடா இந்தக்
கொடுமைக்குப் பேரென்ன ஊழா?

என்ன தமிழனே? ஏன் பிறந்தேனே?
என்னடா அடிமையின் வாழ்வு?—சீச்சீ
இன்னேர் மனிதனுக் கூழியஞ் செய்தேன்
இருப்பதிலும் நன்று சாவு!

—காசி ஆனந்தன்

● குட்டிக் கதை

# இது என்ன சித்தாந்தமோ..

படிக்கும் முன்பு ஒரு வார்த்தை

'பராயவயதையொத்தே பிறரை நாம் அழைக்கும் முறை தங்கியுள்ளது. ஒத்த வயதுடையவர்களானல் சினேகித பூர்வமாக 'தோழரே' — என்றும் வயதிற்கு மூத்தவரானல் 'பெரியவரே' எனவும், 'அண்ணன்' —எனவும், இளையோரைத் 'தம்பி' என்றும் அழைப்பது தான் மரபு.'

—இனிப்படியுங்கள்—

தர்மராஜா — என்பவன் ஒரு 'மாஓசே துங்' சித்தாந்வாதி. இவன் ஒரு நாள் மாஓசே துங் நினைவு விழாவிற்குத் தலைமை வகித்துவிட்டுவீடுதிரும்பும்பொழுது இரவு பத்துமணிக்கும் மேலாகிவிட்டது. வீட்டு வாசலில் கணவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் அவன் மனைவி விசாலம். ஆறுவயதே நிரம்பிய தர்மராஜாவின் குழந்தையும் தன் தந்தையின் வரவை எதிர்பார்த்துக் கண்துஞ்சாமல் காத்திருந்தது. தர்ராஜாவும் வீடு வந்துசேர்ந்தான்.

அவன் நினைவுமுழுவதும் சிறிது நேரத்திற்கு முன் நடந்து முடிந்த கூட்டத்தைப்பற்றியும், அதில் தான் உரையாற்றிய 'மாஓ'வின் சித்தாந்தக் கோட்பாடுகளிலுமே திளைத்திருந்தது. தந்தையைக்கண்ட மகிழ்ச்சியில் பிள்ளை ஓடி வந்து அவன் கால்களைக் கட்டிக்கொண்டு 'அப்பா'—என அமுதமாக அழைத்தது. மகனை வாரியெடுத்துக்கொண்ட அவனோ தன் மகனை,—

"தோழரே! எனக்காகக் காத்திருக்கிறீரோ?" என்று கொஞ்சினன். பிள்ளை ஏதும் புரியாமல் விழித்தது. மறுபடியும் அவன் தன் மகனை 'தோழரே! தோழரே!'—என் அழைத்தது கண்ட அவன் மனைவி விலாசம் 'என்ன நீங்கள்...... உங்கள் மகனைத் தோழரே என்று கூப்பிடுகிறீர்கள்? இன்று ஏனிப்படி மாறிவிட்டீர்கள்?' என்று கணவனிடம் கேட்டாள்.

"தோழி! நீ என்ன சொல்கிருய்? — நாங்கள் எல்லோரும் சமத்துவ, சமதர்மவாதிகளே! நம் தலைவர் காட்டிய பாதையில் பூரணமாக நடப்பதாக என்னையே நான் இன்று ஒப்புக்கொடுத்துவிட்டேன். இனி நீயும் எனக்குத் தோழி போன்றவளே" —என்று தன் மனைவிக்குப் பதில் சொன்னுன் தர்மராஜா. கணவனின் இந்தத் திடீர் போக்கைக் கண்டு வியந்தாள் விசாலம், அவள் மனமோ...

### திருமலை இரத்தினம்

'இது என்ன சிந்தாந்தமோ?' என தனக்குத்தானே ஓலமிட்டுக்கொண்டது!

(கற்பனை)

('மாஓ'வின் உண்மையான சித்தாந்தங்கள் புரியாது 'முற்போக்கு வாதிகள்' — என்று தம்மைப் பீற்றித்திரியும் ஒருசில நண்பர்களுக்காக இதை ஆழ்ந்த வருத்தத்துடன் இங்கு சமர்ப்பிக்கிறேன். —ஆசிரியன்.)

## புரட்சியும் புதுமையும்!

திருகோணமலையின் பல கட்டிடச் சுவர்களிலே மறைந்த சீனத் தலைவர் மாவோசேதுங் அனுதாபப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. ஒருவகைப் பிரசுரங்களின் கீழ்ப்பாகத்தில் **'எமது ஆழ்ந்த புரட்சிகர அனுதாபங்கள்'**—என்று பொறிக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்த அனுதாபத்தில் இது என்னவகைப் புரட்சியோ? என்று பொது மக்களில் பலர் ஆச்சரியம் தெரிவித்தனர்.

'சீனப் பெருநாட்டின் புரட்சித்தலைவர் 'மாவோ' என்பதை நாம் ஒப்புக்கொள்கிருேம். அந்தப் புரட்சித் தலைவர் இறந்ததனல் தெரிவிக்கும் அனுதாபப் பிரசுரத்தில் என்ன புரட்சியை உண்டுபண்ணலாம் என்று சிந்தித்து ஒன்றும் புரியாத நிலையில் 'எமது ஆழ்ந்த புரட்சிகர அனுதாபங்கள்' என அதில் புதுமையைப் புகுத்தியிருக்கும் மாவோத் தோழர்களின் செயல் எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.'—என்று பொதுமக்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இது என்ன புரட்சியோ தெரியவில்லை! உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழப் பிரச்சினையில் ஈழத் தமிழர்களே மூர்த்தண்யமாக போராட வேண்டும்!

## லண்டன்கூட்டத்தில்டேவிட் அஸ்ரர் உரை!

தமிழ் நாட்டின் தொன்மையும் புகழும்மிக்க காஞ்சியிலே கஞ்சிக்கே வழியற்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்த சி. என். அண்ணுதுரை அவர்கள் அறிஞர் அண்ணுவாக மாறிய ஐந்து தசாப்தங்கள் தமிழ் நாட்டின் அண்மைக்கால வரலாருகவே மாறிவிட்டது அப்பேறபட்ட தமிழ் மகனை லண்டன் வாழ் தமிழர் நினைவு கூர்ந்து நன்றி செலுத்து முகமாகவும் தனித் தமிழ் நாடு வேண்டிப் போராடி வரும் ஈழம்வாழ் தமிழினத்தின் போராட்டத்திற்கு ஆதரவு பெறும் பொருட்டும் லண்டனில் இயங்கிவரும் ஈழத் தமிழர் கழகத்தினர் சென்ற சனிக்கிழமை (25-9-76)ல் "விம்பிள்டன் மால்பரோ" மண்டபத்தில் ஒரு கூட்டத்தை நடத்திமுடித்தனர்.

மிகப்பெரிதான அம்மண்டபத்தில் மிகச் சிலரே சமூகம் அளித்திருந்தமை பலருக்கு வேதனையைக் கொடுப்பதாக அமைந்தது. இருந்தபோதும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கு முன்னர் என்றும் இல்லாத அளவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த லண்டன் தமிழர் அதிக அளவில் வந்திருந்தமை ஒரு புதிய களையை ஏற்படுத்தியிருந்தது. அது மட்டுமல்ல டாக்டர் ஜனர்த்தனன் தனது பேருரையில் குறிப்பிட்டது போன்று பல்வேறு முரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட அதே சமயம் இன விடுதலையில் ஆழ்ந்த அக்கறைகொண்ட பலரும் அங்கு வந்திருந்தமை ஒரு சிறப்பம்சமாக இருந்தது. இமிக்கிறேசன் தொல்லைகளைத் தாண்டி ஒருவர் திருப்பி அனுப்பப்பட்ட போது மூவர் பிரான்சில் இருந்துவந்து கலந்துகொண்டது மட்டுமல்லாமல் ஓடியோடி வேலை செய்து யாவரது அன்பையும் பெற்றுக் கொண்ட காட்சி உருக்கமானதாக அமைந்திருந்தது.

### டேவிட் அஸ்ரர்

கூட்டத்திற்கு தலைமை வகுத்த திரு. சுந்தரலிங்கம் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக தனது உரையை முடித்துக்கொண்டு பிரதம பேச்சாளர்களில் ஒருவரான மதிப்பிற்குரிய டேவிட் அஸ்ரரை சபையினருக்கு அறிமுகம் செய்தார்.

தமிழ் மக்களின் நண்பர்களாக ஒரு குழுவாக இயங்கி வரும் பலரில ஒருவரான முன்னுள் ஒப்சேவர் ஆசிரியர் திரு. டேவிட் அஸ்ரர் கணீரென்ற குரலில் அழுத்தம் திருத்தமாக தமது பேச்சை ஆரம்பிக்கலானுர். தனது உருக்கமான பேச்சில் ஈழத்தமிழர் பிரச்சினை மிகவும் பாரதூரமானது எனவும் அதற்கு பிரித்தானிய மக்களின் கவனத்தை திருப்புவதில் உள்ள சிக்கல்களையும் எடுத்து விளக்கினுர். தமிழ்ஈழப் பிரச்சினை தமிழர்களின் பிரச்சினை. அவர்களே மூர்க்கமாக முடிவுகாண வேண்டிய பிரச்சினை என விளக்கிய அஸ்ரர், அயர்லாந்து பிரச்சினையாலும் ரொடிசியா பிரச்சினையாலும் பிரித்தானிய மக்களின் கவனம்திருப்பப்பட்டுகிடக்கும். இச்சமயத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு தேடுவதிலுள்ள சிரமத்தை விளக்கிக் கூறினுர். இருந்தபோதும் இங்குள்ள தமிழரே ஒன்றுதிரண்டு இலங்கை தேயிலையை பகிஸ்கரிக்க தூண்டும் கோசங்களை எழுப்புவதன் மூலம் சில பல உணர்வுகளை ஏற்படுத்த முடியும் என ஆலோசனை வழங்கினுர்.

### மைக்கல் ஸ்கொட்

டேவிட் அஸ்ரரை அடுத்து நீண்ட உரை ஆற்றிய வண. மைக்கேல் ஸ்கொற் அவர்கள் நாகர்களின் போராட்டங்களையும் ஏனைய சிறுபான்மை இனத்தவரின் போராட்டங்களையும் தமிழ் இனத்திற்கு நினைவுபடுத்தினுர். நாகர்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவு வழங்கியதை அடுத்து இந்திய அரசாங்கத்தால் இந்தியாவினின்றே வெளியேற்றப்பட்ட ஸ்கொற் அவர்கள் சிறுபான்மை இனங்களின் பாதுகாவலராக இன்றும் இயங்கிவருகிறுர். ஐ. நா. வைப் பயன்படுத்துவதனுல் ஈழத்தமிழர் போராட்டம் பலன்பெற முடியுமா என்பவற்றை தனது பேச்சில் விளக்கிய ஸ்கொற் உலகெங்கும் வாழும் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் சர்வதேச இயக்கங்கள் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

### குமரகுரு

வண. மைக்கேல் ஸ்கொற்றை அடுத்து ஆங்கிலத்திலும், தமிழிலும் உரையாற்றிய தமிழர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களில் ஒருவரான வழக்கறிஞர் திரு. குமரகுரு அவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது தமிழரின் தொன்மை பெருமை, சிறப்பு இவற்றை விளக்கி நின்ருர். தமிழில் பேசும்போதோ சண்டமாருதமாக மாறி தமிழரின் கீழ் நிலையை அதற்கான காரணங்களை உணர்ச்சிவசப் பட்ட நிலையில் சாடி நின்ருர்.

### ஜனர்த்தனம்

குமரகுருவை அடுத்து எல்லோராலும் எதிர்பார்க்கப் பட்டிருந்த டாக்டர் ஜனர்த்தனனின் பேச்சு ஆரம்பமானதும் சபையினரிடையே அபாரமான அமைதியைக் காணமுடிந்தது. அறிஞர் அண்ணுவின் நாடக நூல்களை ஆராய்ச்சி செய்ததன் மூலம் டாக்டர் பட்டம்பெற்ற திரு. ஜனர்த்தனன் அவர்கள் அறிஞர் அண்ணுவை சிறந்த அரசியல் வாதியாகவும், சீர்திருத்தச் செம்மலாகவும், சிந்தனையாளராகவும், சொல்லேர் உழவராகவும் சொற்பொழிவாளராகவும் காட்டி நின்ற போது சபையினர் உருகி நின்றனர். ஈழத் தமிழ்நாட்டு விடுதலைக்கு உலகெங்கும் வாழும் தமிழரின் ஆதரவை தேடி மலேசியா, சிங்கப்பூர், பிரான்சு, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்றுவிட்டு லண்டன் வந்திருக்கும் திரு. ஜனர்தனன் ஈழத்தில் வாழும் 35 லட்சம் தமிழர் ஓய்ந்தாலும், தமிழ் நாடு மறந்தாலும், ஈழத்

—6- பக்கம் பார்க்க

---

● யாழ் வளாகப் பிரச்சினை

## உனக்கொரு கடிதம்!

புத்தரின் கொள்கைகள், புனிதரின் கருத்துக்கள்,
சத்தியம், சமதர்மம், சகோதரத்துவம்,
காலத்தால் அழியாத கருத்துக்கள் தான்,
ஞாலம் உள்ளமட்டும் அவையும் மறையாது,
காந்தி அமைத்திட்ட ஒரு ராமராஜ்யம்—உனது
வேந்தரால் அதை அமைத்திட முடியவில்லை,
இனவேற்றுமை வேண்டாமென்ருய் நீ வரும்போது
மனவேற்றுமை உண்டு என்று காட்டிவிட்டாய்
இப்போது—

உமக்காக நாம் அளித்துவிட்ட உதவிக்கு
எமக்காக நீ அளித்துவிட்ட பரிசில்கள்,
வந்தோரை வரவேற்கும் பண்பு உண்டு எங்களிடம்,
சந்ததி சந்ததியாய் வந்த குணம் அது—
தந்து விட்டோம் உனககாகச் சில வீடு
வந்து விட்டாய் நீ அவற்றை உனக்காக்க,
என்னுயிரையொத்த மொழிவளர்க்கும் மன்றமொன்று
தன்னுரையையுரைக்கவென்று அமைத்த
அதன் வீட்டின்

கண்ணுடிக்கதவுகளாம் அன்று அவை—இன்றுவெறும்
மண்ணுகிப்போய்விட்ட கண்ணுடித்தூள்கள்,
கதவங்களை மட்டுமா நீ உடைத்துவிட்டாய்—நல்ல
இதயங்களையும் அல்லவா உடைத்துவிட்டாய்—
பல்கலைக்கழகத்தின் சுவர்களில் நீ எழுதிவைத்த
கருத்துக்களை

நல்மனமுள்ள எவர்தான் படித்திடலாம்?
சாதனைகள் செய்யவென்று வந்துவிட்ட உனக்கு
வேதனைகள் மட்டும்தான் செய்யத் தெரிகின்றது—
பட்டங்கள் பெறவென்று வந்துவிட்ட உனது
திட்டங்கள் இப்போதுதான் தெரியவருகின்றது
தமிழ் விரிவுரையாளர்களுக்கு நீ அளித்து விட்ட
அமிழ்தினும் இனிய பு(இ)கழுரைகள் போதுமடா
அன்னை தமிழின் புகழ் மணக்கும் விழாவுக்கு
மின்னை ஒளியாக்கி நாம் அமைத்திட்ட அரங்கத்தை
இருளாக்கத் துணிந்துவிட்டாய் நீ
அருளுள்ள மனிதர்கள் யார்தான் அதைப்
பொறுப்பார்?

பீடு அற்ற வேலைகளை நீ செய்து வந்தாலும்
கேடு கெட்ட நிர்வாகம் உனைத்தட்டிக் கேட்கவில்லை,
ஏழைகள் தான் நாம் உனதரசைப் பொறுத்தவரை
ஆனுலும்

கோழைகளாய் வெகுநாட்கள் தூங்கிக் கிடக்க
மாட்டோம்

நீணுக நீ எம்மைப் பகைக்கிருய்—
ஆனுலும் உனக்கொன்று கூறுகிறேம் மீண்டும்
புத்தரின் கொள்கைகள், புனிதரின் கருத்துக்ள்—
சத்தியம், சமதர்மம், சகோதரத்துவம்'
காலத்தால் அழியாத கருத்துக்கள் தான்
ஞாலம் உள்ள மட்டும் அவையும் மறையாது—

—புங்கையூர் [illegible]

---

## வாசகர் கருத்து

அன்புள்ள ஆசிரியா அவர்கட்கு

சுதந்திரன் 26-9-76ன் அரசியல் மடலில் திருமண் வீட்டிலும் விடுதலை பற்றிய பேச்சு' என்ற தலைப்பில் இந்தியத் தமிழர்களின் தலைமையும் இதற்கு அனுசரணையாக இல்லை. சிங்கள கட்சிகளிடம் சலுகைகள் பெற்று தேசிய இணைப்புக்கு சாதகமாகத் தான்பார்க்கின்ருர்கள்என்ற பதம் மலையகத்தில் வாழும் என்னைப்போன்ற, தீவிர தமிழீழ இயக்கத்தில் ஈடுபட்டு வரும் பல லட்சக்கணக்கான இளம தமிழ் வாலிபர்கள் நெஞ்சை கலக்கமுறச்செய்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளோ அல்லது மலையகத் தமிழ் சமூகத்தினர்களின் சிலரது மத்தியிலோ இப்படியான — சில மனப்பான்மை இருப்பது தவிர்க்கமுடியாத ஒரு செயலாகும், இது எமது துரதிஸ்டமும் கூட. ஆனுல் மலையகத்தில் பல லட்சம் தமிழ் வாலிபர்கள் தீவிர த. வி. கூ. யினரின் கோட்பாடுகளை நன்கு புரிந்துகொண்டும் இதற்காக எந்த நேரத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் தமது உயிரையே தியாகம் செய்ய காத்திருக்கின்றனர் இதனை தேவையென்ருல், எனது இரத்தத்திலே உறுதிப்படுத்த—வேண்டுமென்ருல், அதனையும் செயல்படுத்த ஆயத்தமாயுள்ளேன். எமது ஒருமைப்பாட்டுக்கு கடந்த கால சிற்சில உதாரணங்கள் [illegible] தமிழர் கொடியேற்றத் தம் [illegible] இனக்கலவரங்கள் நடைபெற்ற காலங்களில் பலியான மலையக இளைஞர்களின் தியாகங்கள் இதற்கு சான்ருகும்.

—இரா சுதந்திரநாதன்
கண்டி

● அரசியல் மடலில் இடம்பெற்ற மலையகத் தமிழர்கள் பற்றிய குறித்த கருத்து, கார்டியன் பத்திரிகையாளர் லூலா கொட்டினுடையதே தவிர நம்முடையதல்ல; இ. தொ. கா வின் நிலையை வைத்தே அக்கட்டுரையை திரு. லூலா கொட் எழுதியிருப்பார் என்று ஊகிக்கவேண்டியுள்ளது. —ஆர்

அன்பின் அண்ணன்கோவைக்கு

26-9-76ல் நீங்கள் தீட்டிய அரசியல் மடலில் "வட இந்தியாவிலிருந்து 2500 ஆண்டுகளுக்கு முன்பு வந்து குடியேறி ஆரிய மொழியான சிங்களத்தைப் பேசும் பௌத்தர்கள்" என்று குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனுல் இஃது வாய்மையன்று.

சிங்களவர்களும் தூய தமிழர்களே, அவர்கள் பேசும் மொழியும் தமிழே (திராவிடம்) அவர்கள் ஆரியரும் அல்ல. அவர்கள் பேசும் மொழியும் வட மொழி அல்ல இவற்றை அவர்கள் புரிந்ததும் அல்ல. நாமும் தெரிந்ததும் இல்லை.

ஏன்?காலம்செய்தகோலம் அது. "சிங்களம்" சிங்கத்து நின்று பிறந்தது அன்று 'சீஹெள' அதாவது 'சீளஞ' (எழில்), சிறந்த தமிழ், இதில் நின்று பிறந்தது. (இன்றே சிங்கத்து நின்று பிறந்தது ஆகிவிட்டது) அதாவது தொல் திராவிடத்தின இருபஃது (20) புதல்விகளுள் ஒன்று. இம்பொழியின் எழுத்தும் (பிராமிய) எழுத்துககளே.

கி. மு. 2000 ஆண்டு முதல் நாம் அனைவரும் ஈழத்தில் வாழ்ந்துவருபவர்கள். அதாவது ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னிருந்து என்க.

அ ப. செல்வநாயகம்
கொழும்பு-13

● குறிப்பிட்ட அரசியல் மடலில் இடம்பெற்றிருந்த கருத்து 'கார்டியன்' பத்திரிகையாளர் லூலா கொட்டினுடையதே. —ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வேதனை தரும் முடிவு!

**நான்** என்கிற ஆணவ முனைப்பு அழிந்து படுதலே ஒருவன் பக்குவநிலையடைந்துவிட்டதற்கு அடையாளம் என்று ஆன்மீகவாதிகள் கூறுவார்கள்!

ஆன்மீகத்துக்கு எடுத்துக்காட்டப்படும் இந்தநிலை அரசியலுக்கும் முற்றும் பொருந்தும்! நான், நான் என்கிற ஆணவமுனைப்பு இன்றி, 'நாம்' என்கிற பலத்தைப் பெறுகிறபோதுதான் ஒரு இனமோ இயக்கமோ வலுவுள்ளதாக தலையெடுக்க முடியும்!

ஈழத்தமிழர்களின் கடந்தகால அரசியலை எடுத்துக்கொண்டால் தமிழன் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமே இந்த 'நான்' என்ற அகந்தை — ஆணவ முனைப்பு — தமிழ்த்தலைவர்கள் சிலரிடம் குடிகொண்டிருந்ததுதான்!

நான் நினைத்தால் எதுவும் செய்வேன்—என்னைவிட்டால் வேறுயார் இருக்கிறார்கள்—நான் வைத்ததுதான் சட்டம்—நான் சொல்வதையே அனைவரும் ஏற்கவேண்டும்—என்பன போன்ற 'நான்' என்ற நிலை நம் தமிழ்த்தலைவர்கள் சிலரிடம் கடந்தகாலங்களில் ஊறிக்கிடந்த காரணத்தினால்தான் தமிழ் மக்கள் ஒற்றுமையின்றி, ஐக்கியமின்றி சிதறிச் சீரழிந்து அவதிப்பட நேர்ந்தது!

இன்றைக்கு—நான் என்ற ஆணவமுனைப்பு அடங்கி—நாம் தமிழர்கள் என்ற ஒற்றுமை உருவாகி — அந்த ஒற்றுமையின் சின்னமாக தமிழர் விடுதலைக்கூட்டணி மலர்ந்து—தமிழ்ஈழம் என்ற புனிதமான இலட்சியத்தை நோக்கி—தமிழ் சமுதாயம் சுதந்திரயாத்திரையை மேற்கொண்டிருக்கிறது!

இந்த தமிழின ஒற்றுமையும் ஐக்கியமும் உறவும் மேலும் இறுகவும் பலப்படவும் தமிழர் விடுதலைக்கூட்டணி என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த அடிப்படையில்தான் கூட்டணிக்கு வெளியே தனியே நிற்கும் தமிழர் சுயாட்சிக் கழகத்தையும் கூட்டணியுடன் வந்து சேருமாறு தமிழர் கூட்டணி அழைப்பு விடுத்தது.

ஆனால் கூட்டணியின் இந்த அழைப்பை சுயாட்சிக் கழகம் அணுகிய முறையும் அதன் மீது அது எடுத்துள்ள தீர்மானமும் இன ஒற்றுமையையும் உறவையும் வேண்டி நிற்கும் தமிழ் மக்களுக்கு வேதனையும் வருத்தமும் தருவதாகவே அமைந்துள்ளது.

தமிழர் சுயாட்சிக்கழகம், அடுத்தபொதுத்தேர்தல் பற்றியும், அதன் பின்னர் எடுக்கப்படவேண்டிய சில நடவடிக்கைகள் பற்றியும் தனது கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி கூட்டணிக்கு அனுப்பி வைத்திருந்தது. கூட்டணி நடவடிக்கைக் குழு சுயாட்சிக் சழகத்தின்மேற்படி தீர்மானத்தை நிராகரிப்பதாக அறிவிக்கவில்லை. ஆனால் சுயாட்சிக் கழகத்தின் யோசனையை—தீர்மானத்தை—ஆராய்ந்து அதன் மீது முடிவு செய்வதற்கு முதலில் கூட்டணியில் ஒரு அங்கமாக வந்துசேரும்படிதான் சுயாட்சிக்கழகத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி நேசக்கரம் நீட்டி அழைத்தது. ஆனால் சுயாட்சி கழகமோ, தனது தீர்மானத்தை கூட்டணி ஏற்கவில்லையென்று காரணம் கூறி கூட்டணியின் ஒற்றுமை அழைப்பை தட்டிக்கழித்து நிராகரித்துவிட்டது!

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் இந்தத் தீர்மானம் — 'நான்' என்ற ஆணவமுனைப்பிலிருந்து அக்கட்சி இன்னும் அறவே விடுபடவில்லையென்பதைத்தான் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் கூட்டணியில் இணைந்தபோது—தமிழரசுக்கட்சியின் தீர்மானத்தை கூட்டணி அப்படியே ஏற்கவேண்டுமென்று தமிழரசுக் கட்சியினரோ —தமிழ் காங்கிரஸ் கட்சித் தீர்மானத்தை கூட்டணி அப்படியே ஏற்கவேண்டுமென்று தமிழ் காங்கிரஸ் கட்சியினரோ வற்புறுத்தி பிடிவாதமாக நின்றது கிடையாது; அப்படி வற்புறுத்தியிருந்தால் தமிழின ஒற்றுமையே இன்று சாத்தியப்பட்டிராது.

ஆனால் இரு கட்சியினரும் கூட்டணியாகி—ஒருமித்து மனம்விட்டு பழகியதாலும், உழைத்ததாலுமே—இன்றைய தினம் 'தமிழீழம்' என்கிற பொதுவான வலுவான இலட்சியம் உருவாக முடிந்தது; வட்டுக்கோட்டை மாநாட்டில் அது தீர்மான வடிவம் பெற்று இருகட்சியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும்விட்டது!

தமிழரசுக்கட்சி, 1973ம் ஆண்டு மல்லாகம் மாநாட்டின்போது தனது சமஷ்டிக்கொள்கையை கைவிட்டு, தமிழீழ சுயாட்சிக் கொள்கையை தனது இலட்சியமாகப் பிரகடனப்படுத்திவிட்டது; வட்டுக்கோட்டை மாநாட்டில் அது மேலும் தெளிவுபடுத்தப்பட்டு, தமிழ் ஈழத் தனியரசுக் கொள்கை தமிழரசுக்கட்சியினாலும், தமிழ் காங்கிரஸ் கட்சியினாலும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது!

எனவே சுயாட்சிக்கழகம் 'நான்தான் மூளை'—'நான் மட்டுமே தூய்மையானவன்' — என்ற அகம்பாவ, ஆணவப்போக்கைக் கைவிட்டு — கூட்டணியில் ஒன்றாக இணைந்து தமிழ்ஈழத்தின் விடுதலைக்காக 'புரட்சிகரமாக' உழைக்க முன்வரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்!

யாருடைய சக்தியும் ஆற்றலும் திறமையும் சாட்டிலெறித்த நிலவாக வீணாக அவமாகப் போய்விடக் கூடாது; அது தமிழினத்தின் விடுதலைக்காகப் பூரணமாகப் பயன்படவேண்டும் என்பதுதான் நமது ஒரே குறிக்கோளாகும்.

# சோற்றைப் பறித்தவனா சுதந்திரம் தரப் போகிறான்?

### ஆவரங்கால் கருத்தரங்கில் சிந்தனைச் சிற்பிகேள்வி!

7-10-76ல் ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையம் நடாத்திய கருத்தரங்குக்கு திரு. க. திரவியம் (ஆவரங்கால் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கிளைச் செயலாளர்) தலைமை தாங்கினார். இவர் தனது தலைமையுரையின்போது கூறியதாவது:-

"இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழர்கள் ஒரே இனமாக வாழ முன்னிற்கின்ற வேளையில் சிறுபான்மை என்ற பெயரைச்சொல்லி சாதி அடிப்படையில் இயக்கம் நடாத்துவோரை சிறுபான்மைத் தமிழ் மக்கள் ஒரு போதும் நம்பக்கூடாது. சாதியை வைத்து இயக்கம் நடாத்தும் துரோகிகள் நம் மக்களிடையே வளரவிடக் கூடாது. எமது தமிழர் கூட்டணி சாதி பேதம் இல்லை. இல்லை என்று தீர்மானம் கொண்டுவந்த பின்பும் இப்படிப்பட்டவர்கள் 'சீல்' வைத்து இயக்கம் நடாத்துவது வெட்கக்கேடான காரியமாகும். இவர்கள் கோடரிக்காம்புகள். தமிழ் ஈழம் நாம் அமைக்கும் போது இப்படிப்பட்டவர்களுக்கு இந்த நாட்டிலே இடம் இல்லை. சாதி வைத்து இயக்கம் நடாத்தினால் கூட்டணி மகாநாட்டு தீர்மானத்தின்படி இவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள் ஆவார்கள். இளைஞர்களின் வலதுகரமாகவும் ஈழத் தமிழகத்தின் தலைவனாகவும் அண்ணன் அமிர்தலிங்கம் திகழ்வது கூறுதியாகிவிட்டது. தமிழ் தலைவர்கள் ஒன்றுபட்ட நிலைகண்டு இந்நாட்டு சிங்கள இனமும் ஏன் உலகத்தமிழர்களே திகைத்துவிட்டார்கள்.

திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ. பேசுகையில் கூறியதாவது:-


"எமது சோற்றைப்பறித்தவன் சுதந்திரம் தரமுடியுமா? ஆனையிறவு தடுப்பு முகாமிலே பொலீஸ் படையைப்போட்டு வடபகுதி மக்களால் செய்கை பண்ணப்பட்ட நெல்லினை யாழ்ப்பாணம் கொணடுவரவிடாது தடுத்தவர்களின்அரசாங்கம் சோசலிச அரசாங்கமா? எனவே சோற்றைப் பறித்தவன் சுதந்திரம்தரமுடியுமா? சோசலிசம் வேண்டுமென்றாலும் சரிஜனநாயகம்வேண்டுமென்றாலும் சரி நாம் நம்மை ஆளவேண்டும். நம்மை நாம் ஆளுவதுதான் சோசலிசமே ஒழிய அந்நியன் ஆளுவது சோசலிசமாகாது.

தன்னாட்சி உள்ள நாட்டிலேதான் சோசலிசத்தை காணலாம் ஆனால் அந்நியன் ஆட்சியில் தமிழர்கள் ஒரு போதும் சுதந்திரம் அடையமுடியாது எமதுஇயக்கம் அகிம்சையை ஆயுதமாகப்பாவிக்கிறது. அந்த ஆயுதம் சிங்கள அரசாங்கத்தால் தூக்கி எறியப்பட்டு உதாசீனம் செய்யப்பட்டால் பயங்கரபீரங்கிகளுடனும் போரிடத்தயங்கமாட்டோம். இதுவே எமது கடைசி முடிவு.

"தமிழ் இனமும் சிங்கள இனமும் தனித்து வாழ்வதன் மூலம்தான் உண்மையான சோசலிசத்தையும் தேசிய உணர்ச்சியையும் பொருளாதார வளர்ச்சியையும் காணமுடியும்.

அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"பொழுதுபோக்குக் காக அரசியல் பேசுவதோவெறும் அரசியல் சிநதனைகளைப் பகிர்ந்துகொள்வதோ இன்றைய தமிழ் மக்களது அரசியல் சூழநிலையில் தேவையற்ற விடயங்களாகும். இறுதியாக நாம் நம்மை ஆள முடிவு கட்டிவிட்டோம் இதற்காக நாம் போராடி வரும் இவ்வேளையில் வீட்டுக்கொருவர் என்ற வீதம் சுமார் 10000 வாலிபர்களாவது எமது அணியில் நின்று போராடத் தயாராகவேணடும். அதை விடுத்து வெளியில் இருந்துகொணடு அவர்கள் என்ன செய்தார்கள் இவர்கள் என்ன செய்தார்கள் என்று குறைகூறும் நேரம் அல்ல இது.



தமிழினம் சலுகைகளையும் உரிமைகளையும் கேட்டுப் பெறும் நிலையில் இன்று இல்லை. தமிழர்கள் மத்தியில் எழுச்சி விடுதலை உணர்ச்சி ஏறபடும் போதெல்லாம் அவற்றை சமாளிக்கும் நோக்குடன் சமரசப் பேச்சு வார்த்தை என்னும் போர்வையில் அறிக்கைகள்விட்டு கடந்தகாலங்களில் நடந்ததைப்போல் இப்போதும் எம்மை அரசு ஏமாற்றலாம் என்பதை நாம் அறியாமலில்லை. இனியும் நாம் ஏமாறத் தயாரில்லை. தமிழினம் ஏமாந்த காலம் மலையேறிவிட்டது.

சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம், த. வி. கூ. ஆவரங்கால் கிளை உபதலைவர் க. முருகேசு ஆகியோரும் பேசினர்.

## கூட்டுறவு ஊழியர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரான திரு. வை. இராசசுந்தரம் தலைமையிலுள்ள சங்கானை ப. நோ. கூ. சங்க நிர்வாகம் சீர்கெட்டுவிட்ட தென்றும், அதை உடனடியாக கலைக்கும் படிகோரியும் சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர்களும், அவர்களது கோரிக்கைக்கு ஆதரவாக இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் வட இலங்கைக் கிளையும் கடந்த ஒரு கிழமைக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்துவருவது தெரிந்ததே. சங்கானை ப. நோ. கூ. கூ. சங்க நிர்வாகம் உடனடியாக மாற்றியமைக்கப்படாவிடின், சங்கானை ஊழியர்களுக்கு ஆதரவாக அகில இலங்கை ரீதியாக 15-10-76ல் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படு மென்று இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நிர்வாகச் சீர்கேட்டின் உச்சக்கட்டத்தையடைந்துள்ளதாக சொல்லப்படும். சங்கானை பா. நோ. கூ. சங்க நிர்வாகத்தைஉடனடியாகக் கலைக்கும்படி தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உ.க் களும் [illegible] கத்தைக் கோரியுள்ளனர்.

## விடுதலைப் பய...

—1-ம் பக்கத் தொடர்

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"1619ம் ஆண்டு தமிழர்கள் போர்த்துக்கேயரிடம் இழந்த அரசுரிமையை மீண்டும் பெறும்வரை தமிழர்களின் விடுதலை முயற்சிகள் தடைப்படக் கூடாது. ஈழத் தமிழர்களிடம், வளமான மொழியுண்டு, தனியான நாடு உண்டு. வாழ்வுப்பண்புகள் உண்டு. இல்லாதது ஒன்று. அது அரசு. அதை அமைப்பதுதான் எமது பிரச்சினை.

"சமத்துவம் கோரிய சமஷ்டி கோரிய காலங்கள் மறந்துபோன, சிங்களவர்களின் வாய்ப்பில் இருந்து பறந்துபோன காலப்பகுதி. விடுதலைக்கோரிக்கை மூலம் பெறப்படுவதல்ல சொந்த முயற்சியால் பெறப்படுவது. சைப்பிரஸில் துருக்கியர் பெற்ற விடுதலையும்,ரொடிசியாவில் ஆபிரிக்க இனத்தவர் பெறப்போகிற வெற்றியும் வரலாற்று நிகழ்ச்சிகள் —இதையாரும் மறந்துவிடக்கூடாது.

## பட்டிருப்புத் தொகுதி த. வி. கூ. கிளை அமைப்பு!

எதிர்வரும் 16 - 10 - 76 சனிககிழமை காலை 10.00 மணியளவில் பட்டிருப்பு அமைப்புக் குழு திரு. வ. ந. நவரத்தினம் பா. உ. அவர்கள் தலைமையில்கூட விருக்கிறது. 17-10-76 ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் பட்டிருப்புத் தொகுதிக் கிளை புனருத்தாரணம் செய்யப்படடவிருக்கிறது.

16-10-76 சனிக்கிழமை காலை நடைபெறும் அமைப்புக்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து ஒந்தாச்சிமடம், பெரிய கல்லாறு, குறுமண்வெளி, மண்டூர் முதலாம் இரண்டாம் குறிச்சி, பழுகாமம், செட்டிபாளையம் ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்படும்.

17-10-76 ஞாயிறு காலை 8.30 மணிக்கு பட்டிருப்பு தொகுதிக்கிளை அமைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன பாதுகாப்புச் சட்டம் மனித அடிப்படை உரிமைகளைப் பறிக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறீரா?

## சட்டமா அதிபரிடம் பிரதம நீதியரசர் கேள்வி!

—1-ம் பக்கத் தொடர்

சிட்டர் ஜெனரல் புள்ளை நாயகம், எச். டபிள்யூ. ஜெயவர்த்தன ஆகிய முன்னணிச் சட்டமேதைகள் ஆஜராகியிருந்தனர். மூதறிஞர் செல்வாவும் வந்திருந்தார்.

மீளாய்வு மனுமீது திருவாளர்கள்: ஜீ. ஜீ. பொன்னம்பலம், எம். திருச்செல்வம், ஏ. மகேந்திரராசா, கே. தேவராஜா, எம். பரராசசிங்கம் ஆகியோரும், றிட்மனுமீது எம். திருச்செல்வம், ஜே. ஏ. செருபின், கே. கனகஈஸ்வரன், ஜீ. ஜீ. பொன்னம்பலம் (யூனியர்), ஏ. மகேந்திரன், எஸ். உருத்திரமூர்த்தி, திருமதி. எஸ். ஞானகரன் ஆகியோரும். 4வது பிரதிவாதியான அ. அமிர்தலிங்கத்தின் சார்பில் ஆஜராகின்றனர்.

வி. என். நவரத்தினம் சார்பில், எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, எச். டி. தம்பையா, டாக்டர். என். திருச்செல்வம், சி. ரத்துவத்தை ஆகியோர் ஆஜராகின்றனர்.

கே. பி. இரத்தினம் சார்பில், முன்னாள் உதவி சொலிசிட்டர், ஜெனரல் வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், எஸ். சி. சந்திரகாசன், சி. வி. விவேகானந்தன், எஸ். உருத்திரமூர்த்தி, எம். வை. எம். பெயிஸ் ஆகியோர் ஆஜராகின்றனர்.

கே. துரைரத்தினம் சார்பில், திருவாளர்கள் எஸ். நடேசன் கியூ. சி. கே. கனகஈஸ்வரன், டாக்டர் நீலன் திருச்செல்வம், செல்வி புறாடி ஆகியோர் ஆஜராகின்றனர்.

மீளாய்வு மனுமீதான விசாரணை முதவில் எடுக்கப்பட்டு, அதன் மீது சட்டமா அதிபர் திரு. சிவாபசுபதி வாதம் நிகழ்த்தத்தொடங்கியுள்ளார். அரசியல் நிர்ணய சபையில் சொல்லப்பட்ட கருத்துக்களை வாசிக்க சட்டமா அதிபர் முற்பட்ட போது அதை திரு. பொன்னம்பலம் ஆட்சேபித்து, ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்தில் இவை எடுத்தாளப்படவில்லையென்றும், அடிப்படைத்தீர்மானங்கள் பற்றி மட்டுமே அங்கு அலசப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர்:- (ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம்) அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் என்ன கூறினர்கள் என்பதை அறிவது உதவியாக இருக்கும். அவர்களது பேச்சுக்களைக் கவனியாது நாம் கண்களை மூடிக்கொண்டிருக்கவேண்டும் என்று நீர் கூறுகிறீரா?

ஜீ. ஜீ. ட்ரயல்—அற்—பார் விசாரணைகளின்போது அரசியல் நிர்ணயசபைப்பேச்சுக்களை நான் எடுத்தாளவில்லை. இதற்கு ஒரு காரணம்—அவை எனக்கு விளங்காத மொழியான சிங்களத்தில் இருந்ததுதான் அடுத்தது—அந்தப்பேச்சுகளில் சில அர்த்தமற்ற விழல் பேச்சுக்களாக இருந்தன.

பிரதமநீதிபதி:- சட்டமா அதிபர் விரும்பினல் அந்த உரைகளை இங்கு வாசித்துக் காட்ட அவருக்கு உரிமையுண்டு.

தொடர்ந்து சட்டமா அதிபர் தமது உரையை நிகழ்த்தினர். மக்களின் சுதந்திரத்தைவிட அரசாங்கத்தின் பாதுகாப்பே அதிமுக்கியமானது என்ருர் அவர்.

சட்டமா அதிபரின் வாதத்தின்போது மற்ருேர் கட்டத்தில் குறுக்கிட்ட திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பின்வருமாறு கூறினர்:—

"பொதுஜன பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் சட்டப்புத்தகத்தில் ஓர் அங்கமாகவிருக்கின்ற பொழுதிலும், அது அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ்தான் கட்டுப்பட்டு அமுல் செய்யப்படவேண்டும். பின்வரும் நிபந்தனைகளுக்கமைய பொதுஜன பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகக் கருதப்படவேண்டும்.

(1) அரசியலமைப்புத் திட்டத்தின் நியதிகளுக்கமையவே இதற்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைக்கும்.

(2) அரசியலமைப்புத் திட்டத்தின் 134(2)வது சரத்து சட்டபூர்வமான முறையிற் செயற்படுத்தப்படவேண்டும்.

அரசியலமைப்புத் திட்டத்தின் 134(2)வது சரத்து பின்வரும் சட்டபூர்வமான நிலையை வலியுறுத்துகிறது.

"அவசரகாலநிலை ஏற்பட்டுள்ளது என அல்லது ஏற்படப்போகிறது என பிரதமமந்திரி ஜனதிபதிக்கு ஆலோசனை அளிக்குமிடத்து, ஜனதிபதி அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தல்வேண்டும். அவசரகால நிலை தொடர்பில் பிரதம மந்திரியினல் சட்டமுறையாகப் புரியப்படும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள எல்லாக் காரியங்களிலும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் மீது ஜனதிபதி செயலாற்றுதல் வேண்டும்!"

"தேசிய அரசுப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாக பொது ஜன பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் இதுவே சரியான சட்டபூர்வமான நிலையாகும். இதையே முந்திய நீதிமன்றத்திலும் சொன்னேன். இங்கும் இதே நிலையையே கடைப்பிடிக்கப்போகிறேன்!"

நீதி. நித்தவெல:- பொது ஜனபாதுகாப்புக் கட்டளைச் சட்டம் தேசிய அரசுப்பேரவையினல் நிறைவேற்றப்பட்ட சட்டமாகக்கருதப்படுவதற்கு முன் அந்தச் சட்டத்தின் நிலையென்ன?

சட்டமா அதிபர்:- பொது ஜன பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் அப்போதும் கூட ஒரு சட்டமாகவே அதிகார பூர்வமாக அமுலில் இருந்தது.

பிரதம நீதியரசர்:. சில நிபந்தனைகளுக்குக் கீழ்த்தான் பொதுஜன பாதுகாப்பு கட்டளைச் சட்டம் தேசிய அரசுப்பேரவையினல் நிறைவேற்றப்பட்ட சட்டமாகக்கருதப்படும் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

பிரதம நீதியரசர்: பொது ஜன பாதுகாப்புச் சட்டம் மனித அடிப்படை உரிமைகளை பறிக்கும் சக்திவாய்ந்தது என்பதை நீர் ஏற்றுக் கொள்ளுவீரா?

சட்டமா அதிபர்: ஆம் பிரபு, அதனை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். நாட்டின் பாதுகாப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பேணுதல், ஆகியவற்றுக்காகவும், படைக்கலகம் உள்நாட்டுக் கலவரம் என்பனவற்றை அடக்குவதற்காகவும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசியமான சேவைகளை- தங்குதடையின்றிச் செய்வதற்காகவுமே அவசரகாலச் சட்ட விதிகளின் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை ஒரு அரசாங்கம் தற்காலிகமாகத் தடைசெய்வது சட்டவிரோதமான செயலாகாது.

"பொதுஜன பாதுகாப்பை பொறுத்தமட்டில் ஜனதிபதி அரசியலமைப்புத்திட்டத்தின்படி 134(2)வது சரத்துப்படி பிரதமரின் ஆலோசனைப்படியே நடக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் அதேநேரத்தில் ஏற்கெனவே அமுலில் உள்ள சட்டங்களை நாம் கண்களை மூடிக்கொண்டு நிராகரித்துவிடுவதும் தவருன செயல் என்பதை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும்!"

## தமிழ் ஈழம்...

—1-ம் பக்கத் தொடர்

வேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், ஜனுப் ஏ. உதுமா லெவ்வை ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நவம்பர் 6ம் திகதி நடத்துவதெனவும், அடுத்த நடவடிக்கைக் குழுக் கூட்டத்தை நவம்பர் 13, 14ம்திகதிகளில் மூதூரில் நடத்துவதெனவும் 10.10.76ல் யாழ்ப்பாணத்தில் ருேச் டீ, வாஸ் தலைமையில் நடந்த நடவடிக்கை குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையிலும் மொழிவழித் தொழிற்சங்கம் உதயம்!

"மொழிவழி பிறந்து சங்கம் அமைத்தபடியால் தான் இன்று அரசாங்க எழுதுவினைஞர்கள் தன் மானத்துடனும், சுயமரியாதையுடனும், தமிழுணர்வோடும், இனவிடுதலைக்காக வாழக்கூடியவர்களாக விளங்குகின்ருர்கள். அதே போன்று மற்றும் துறைகளில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் மாற்றுத் தொழிற்சங்கங்களை நம்பியிராது மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைப்பதன் மூலம் தமிழ் தொழிலாளர்களின் சக்தியை ஒன்றுபடுத்தி பலம் வாய்ந்த தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியை கட்டியெழுப்பமுடியும். ஆகவே தான் நம்பிக்கையுடன் மொழிவழித் தொழிற்சங்கங்களில் சேர்ந்து உழைக்க முன்வருமாறு தமிழ் தொழிலாளர்கள் அனைவரையும் வேண்டுகின்றேன்."

இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. க. சோதிலிங்கம் அவர்கள் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் புதிய மொழிவழித் தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

தமிழ் தொழிற்சங்க கூட்டணியினல் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய தொழிற்சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையில் திரு. த. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மொழிவழி பிரிந்தால் தான் தமக்கு விமோசனம் என்று உற்சாகத்தோடு பெருந்தொகை ஊழியர்கள் சமூகமளித்திருந்தனர்.

திரு. க. சோதிலிங்கம் தொடர்ந்து பேசுகையில் எமது தமிழினத்தின் பிரச்சினைகளைத் தட்டிக் கேட்பதற்கு எவரும் முன்வரமாட்டார்கள். நாம் ஒன்றுபட்டிருந்தால் மற்றவர்கள் உதவியில் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 1961ம் ஆண்டில் தோன்றியிராதுவிடில் அரசாங்க ஊழியர்கள் நிலை மிக மோசமடைந்திருக்கும். தமிழ் அரசாங்க ஊழியர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் காரணமாகும் என்ருர்.

தமிழ் தொழிற்சங்கக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தன் பேசுகையில் இந்த நாட்டில் தமிழ் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னேடியாக வாழ்ந்தவர்கள் தமிழர்களே, தொழிற்சங்க வளர்ச்சியில் தமிழர்கள் பெரும் பங்கு ஆற்றியிருக்கின்ருர்கள். ஈழம் வாழ் தமிழ் தொழிலாளர்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி தமிழ்தொழிற்சங்க அணியில் அவர்களை ஒன்று திரட்டி தமிழ் தொழிலாளர்களின் உரிமையைப்பெற்றுக் கொடுப்பதற்கும்; தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், சிங்களத்தொழிலாளர்கள் தேவையற்ற முறையில் தமிழ்ப்பகுதியில் நியமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவும் முடியும். தமிழ்தொழிலாளர்களிடையே பெரும் சக்தியிருக்கிறது. இச்சக்தி ஒருமுகப்படுத்த பயன்படுத்தப்படுமாயின் விடுதலை இயக்கத்திற்கு பக்கபலமாக அமையும்," என்ருர்.

மேலும் அவர்பேசுகையில்—கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் தொழிற்சங்கம் ஒன்றிருந்தால், தேசிய கடதாசிக்கூட்டுத்தாபனம் என்று பெயர் மாற்றமடைந்திருக்க முடியாது என்ருர்.

அடுத்து இலங்கை மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத் தலைவர் திரு. ம. கனகேந்திரன் (ஈழவேந்தன்) அவர்கள் பேசுகையில் "தமிழன் தமிழனுக வாழவேண்டுமாயின் தன் நிலையினை உணர்ந்து தமிழ்ஈழம் காண்போம் என்ற நம்பிக்கை ஏற்படவேண்டும். பறிபோய்க் கொண்டிருக்கின்ற கிழக்கு மாகாணத்தை மீட்க வேண்டுமாயின், கிழக்கிலங்கையில் சகலதுறைகளிலும் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் மொழிவழித் தொழிற்சங்க அணியின் கீழ் திரளவேண்டும்" என்ருர்.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் தமிழர் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன வாழைச்சேனைக் கிளை" என்ற பெயரில் புதிய மொழிவழித் தொழிற்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர் திரு. ஞானப்பிரகாசம் நன்றியுரை கூறினர்.



பாவியுங்கள்
பளிச்சிடும் வெண்மைக்கு
ரோயல் நீலம்
தயாரிப்பாளர்கள்:
சிவா இன்டஸ்ரீஸ்
112 1/3, 4ம குறுக்குத்தெரு,
கொழும்பு-11.
விநியோகஸ்தர்கள்:
சேகர் அன் பிறதர்ஸ்,
ஆதம்மலி கட்டிடம்,
20, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 35049

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொப் இசை' என்ற போர்வையில் தமிழ்க் கொலை!
# வதிரி ஆலயத்தின் முன் இடம்பெற்ற அசிங்கம்!

சென்ற 27-9-76 ஆம் திகதியன்று தமிழ் ஈழத்தின் உணர்ச்சியுள்ள தமிழர்கள் வாழும் வடமாராட்சிப் பகுதியிலுள்ள வதிரியில் ஒரு பொப்பிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இது பொப்பிசை நிகழ்ச்சியா அல்லது ஒரு சிலர் ஒருசில தேவைகளுக்காக நிகழ்த்திய கபட நாடகமா என்பது இன்னும் புரியாத புதிரே. இவர்கள் இந்த நிகழ்ச்சியை, ஒரு ஆலயத்தில் நிகழ்ந்த வருடாந்த திருவிழாவின்போது, ஒரு திருவிழாக்காரர்கள் ஒழுங்கு செய்த சிறப்பு நிகழ்ச்சி என வருணித்துள்ளனர். இதனால் இந்த ஆலயத்துக்கு ஏற்பட்ட இழுக்குக்கு யார் பொறுப்பு என்பதும் பிரச்சினையாகும்.

இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் பெரிதாக விளம்பரப்படுத்தினர்கள். நிகழ்ச்சி மாலை 7 மணிக்கு ஆரம்பமாகுமென்றும் விளம்பரப்படுத்தினர்கள். இவர்களது விளம்பரத்தில் மயங்கிய மக்கள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு 7 மணிக்கே வந்துசேர்ந்தார்கள். 7மணி தொடக்கம் 11 மணி வரை ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. ஆனல் அவை எல்லாம் சிங்களப்பாடல்களே, இதுபொறுமையிழந்த மக்களுக்கு இன்னும் ஆத்திரத்தை கூட்டியது. மக்கள் விழாக் குழுவினரோடு தொடர்பு கொண்டு தமிழ்ப் பாடல்களை ஒலிபரப்புமாறு கூறியும் அதுவரையில் ஒரு தமிழ்ப்பாடலாவது ஒலிபரப்பப்படவில்லை, என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின் அவர்கள் தேர்ந்தெடுத்த பிரதம விருந்தினர் இரவு 11மணிபோல் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர், பிரதம விருந்தினர் ஒரு சிங்களவர். பருத்தித்துறைப் பொலிசுப்படையில் வேலை பார்ப்பவர். விழாக்குழுவினருக்கு இந்தச் செந்தமிழர்கள் வாழும் வடமாராட்சியில் பிரதம விருந்தினராக தேர்ந்தெடுக்க தமிழர் ஒருவரும் கிடைக்கவில்லை எனபது மிகவும் மனவருத்தத்துடன் குறிப்பிடக்கூடியது.

அவர்களது பொப்பிசை ஆரம்பமாகிய முதலில் ஒரு தமிழர் வந்து கடவுளைவேண்டிப்பொப்பிசை வழங்குகிறர். அடுத்து ஒரு சிங்களக் குமரி மேடையில் ஏறிப்பாடுகிறர். தமிழ்ப்படுகொலை நிகழ்கிறது. அவ்விடத்தில் நிற்கவே நெஞ்சு எரிகிறது. சில வயோதிபர்கள் வாய்க்கு வந்தபடி திட்டியபடி வீட்டைநோக்கிச்செல்கின்றனர். தொடர்ந்து சிங்கள ஆக்கிரமிப்பு நடைபெறுகிறது. இரத்தம் கொதிக்கிறது. சிங்களப் பாடகர்கள் செய்வதைப் பார்த்து அல்ல விழாக்குழுவினர் எனத் தம்மைக் கூறுபவர்கள் அவர்களுக்கு மாலை இத்தியாதி அணிவிப்பதுடன் மக்களையும் கரகோசம் செய்யும்படி ஒலிபெருக்கியில் வேண்டிக் கொள்கிறுர்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்ற நோக்குடன் சிங்களப்பாடகர்களும் தொடர்ந்து தமிழுக்கு தம்மால் செய்யக் கூடிய சித்திரவதையைசெய்கிறுர்கள். அவர்கள் ஆடவும் தொடங்குகிறுர்கள் (கலையை முற்றுக பருகியதால் போலும்) தமிழ் நெஞ்சங்கள் கொதிக்கின்றன. சிலர் இறைவனிடம் முறையிடுகிருர்கள். (ஆனல் இந்த தமிழ்க்கொலையையும் ஆட்டத்தையும் காணச்சகிக்காது இறைவனும் எங்கேயாவது ஓடி மறைந்திருப்பார்) ஆனல் விழாக் குழுவினரும் தமது நிலையை மாற்றுவதாக தெரியவில்லை. பொங்கிவரும் ஆத்திரத்தை அடக்கவோ வெளிப்படுத்தவோ முடியாமல் தமிழ் நெஞ்சங்கள் தமது வீட்டை நோக்கிச்செல்கின்றன.

சிங்கள ஆக்கிரமிப்பு அம்பாறையிலும், மன்னரிலும மாத்தறையில் கண்டியிலும் கம்பளையிலும் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலுள்ள வடமாராட்சியிலும் நடைபெறத்தொடங்கி உள்ளதை இந் நிகழ்ச்சி காட்டுகிறது. ஆனல் இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தம் மாலேயைய தமிழுக்கு இந்தக் கதி உண்டாகிறது என்பதை உணரவேண்டும். கலை ஆர்வம் எல்லோருக்கும் இருப்பது இயற்கை. அதற்காக தமிழை, தமிழ் ஈழத்தை அவமதிக்கத்தேவையில்லை. தமிழ் மணம் மாருத தமிழ் ஈழம் ஒரு சிலரின் ஒரு சில தேவைகளுக்காக அதை இழப்பதை தமிழ் மக்கள் ஒருபோதும்அனுமதிக்கமாட்டார்கள் என்பதை மிகவும் ஆணித்தரமாக கூறிவைக்க விரும்புகிறுர்கள்.

— வதிரியான்

---

### தமிழ் ஈழப் பிரச்...

—3-ம் பக்கத் தொடர்

தமிழ்நாடு வேண்டி நான் விசாணைவே மாறிவிடுவேன் என கூறிநின்ற காட்சி சபையோரை உருக்குவதாக அமைந்திருந்தது. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பலர் விக்கி அழுததை அவதானிக்க முடிந்தது.

இக் கூட்டத்தின் சிறப்பு அம்சமான கலந்துரையாடல் வாய்ப்பு கூட்டத்தின் இறுதியில் யாவருக்கும் கிடைத்தது. அங்கே பாய்ந்த சகோதரத்துவத்தை, தாய் நாட்டுப் பற்றை, ஈழவிடுதலை ஒற்றுமையை, ஏதாவது செய்வோம் என்ற உணர்வைப் பலரும் பெற்று மண்டபத்தைவிட்டு வெளியேறிய காட்சி மகிழ்ச்சியானதே.

—ஈழத்து பாவெல்
(நன்றி; இலண்டன் முரசு)

---

# கிழக்கில் நடைபெறும் பாத யாத்திரை விபரம்

பொத்துவிலை அடுத்துள்ள உகந்தையிலிருந்து கடந்த 9-10-76 சனிக்கிழமை மாலை ஆரம்பமான தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களின் கொள்கைப் பிரசாரப் பாதயாத்திரை 29-10-76ல் வெருகலம்பதியில் முடிவடையும். இப்பாத யாத்திரைக்கு திருவாளர்கள் செ. இராசதுரை பா. உ. சாம்தம்பிமுத்து. மு. மாணிக்கம், திருமதி கலா தம்பிமுத்து ஆகியோர் தலைமை தாங்குகிறுர்கள்.

17-10-76 முதல் பாதயாத்திரைசெல்லும் இடங்கள் வருமாறு:-

17-10-76 ஞாயிற்றுக் கிழமை காலை: கல்முனை மாலை: பாண்டிருப்புபொதுக் கூட்டம்.

18-10-76 திங்கட்கிழமை காலை: துறைநீலாவணை, பெரிய நீலாவணை. மதியம்: பெரிய கல்லாறு — கருத்தரங்கு, பி. ப: கோட்டைக் கல்லாறு — கருத்தரங்கு மாலை: களுவாஞ்சிக்குடி— கருத்தரங்கு.

19-10-76 செவ்வாய் கிழமை காலை: களுதாவளை —கருத்தரங்கு. மதியம்: தேற்றுத்தீவு— கருத்தரங்கு பி. ப: மாங்காடு — கருத்தரங்கு. மாலை: செட்டிபாளையம்—கருத்தரங்கு.

20-10-76 புதன்கிழமை காலை: குருக்கள் மடம்— கருத்தரங்கு. மதியம்: கிரான்குளம். மாலை:பொதுக் கூட்டம்.

21-10-76 வியாழக்கிழமை காலை: புதுக்குடியிருப்பு — கருத்தரங்கு தாளங்குடா— கருத்தரங்கு. மதியம்: ஆரையம்பதி. மாலை: கல்லடி உப்போடை. நொச்சிமுனை 17ம் வட்டாரம் பொதுககூட்டம்

22-10-76 வெள்ளிக் கிழமை காலை: கல்லடி—16ம் வட்டாரம். மதியம்: 15ம் வட்டாரம்—கல்லடி. மாலை: நாவலடி—கருத்தரங்கு.

23-10-76 சனிக்கிழமை காலை: அமிர்தகழி — சீலாமுனை. மதியம்: புன்னைச்சோலை. மாலை: இருதயபுரம் பொதுக்கூட்டம்.

24-10-76 ஞாயிற்றுக் கிழமை காலை:பெரியஊறணி சின்ன ஊறணி. மதியம்: கொக்குவில், சத்துருக்கொண்டான் பி. ப: தன்னாமுனை ஆறுமுகத்தான் குடியிருப்பு மாலை: ஏறுவூர் பொதுக் கூட்டம்.

25-25-76 திங்கட்கிழமை மாலை: செங்கலடி, கொம்மாதுறை. மதியம்: வந்தாறுமூலை —கருத்தரங்கு. பி. ப: சிற்றுண்டி — கருத்தரங்கு. மாலை: முறக்கொட்டாஞ்சேனை பொதுக்கூட்டம்.

26-10-76 செவ்வாய்க் கிழமை. மாலை: சந்திவெளி —கருத்தரங்கு. கிரான் — கருத்தரங்கு. மதியம்: கற்குடா. பி. ப: பேத்தாளை. மாலை: வாழைச்சேனை பொதுக்கூட்டம்.

27-10-76 புதன்கிழமை காலை: கறுவாக்கேணி. மதியம்:கிண்ணையடி. மாலை:மீராவோடை தமிழ்.

28-10-76 வியாழக்கிழமை காலை: மாங்கேணி. மாலை: வாகரை, கருத்தரங்கு.

29-10-76 வெள்ளிக் கிழமை காலை: பால்சேனை. மதியம்: கதிரவெளி — கருத்தரங்கு மாலை: வெருகலப்பதி —யாத்திரை பூர்த்தி.

---

# புத்தளம் நகரசபைத் தலைவர் இபுனு போட்டாரே ஒரு போடு!

தமிழ்ப்பகுதிக்கு [illegible] எத்தனையோ அமைச்சர்கள் அடிக்கடி விஜயம் செய்கிறுர்கள். அவர்களை கைகட்டி வாய் புதைத்து காலில் விழுந்து சில அடிமைப் பிறவிகள் வரவேற்கின்றன; மாலையிடுகின்றன; காலையும் கழுவுகின்றன. வருகின்ற அமைச்சர்களும், தாம் ஏதோ ஆகாயத்தில் மிதப்பதுபோன்ற உணர்வுடன் தமிழர்களுக்கு சகல உரிமைகளையும் தாம வழங்கியுள்ளதாகவும், எவ்வித பாரபட்சமும் தாம் காட்டுவதில்லையென்றும் அடித்துப் பேசிவிட்டு வந்துவிடுகிறுர்கள். அமைச்சரின் பேச்சை நேரடியாக தட்டிக் கேட்பதற்கு, மறுப்பதற்கு அங்கிருக்கும் அடிவருடிகளுக்கு திராணி ஏற்படுவதில்லை!

ஆனல் மதத்தில் வேறுபட்டாலும், இனத்தாலும் மொழியாலும் தமிழரான இஸ்லாமிய பிரமுகர் ஒருவர் அமைச்சர் ஒருவரை நேரே நிறுத்தி, நெற்றிக்கு நேரே அமைச்சரினதும், அரசாங்கத்தினதும் இனப் பாரபட்சக் கொள்கையை தோலுரித்துக் காட்டியிருக்கிறர். அத்தகைய சாதனையை துணிச்சலுடன் செய்தவர் புத்தளம் நகரசபைத் தலைவரான ஜனப் இபுனு அவர்கள் தாம்!

புத்தளத்தில் புதிய பஸ் நிலையத்தை அண்மையில் அமைச்சர் கே. பி. [illegible] யகா திறந்துவைத்[illegible] பேசுகையில் 'இனத்துவேஷத்துக்கு இங்கு இடமில்லை' யென்று கூறி இனவெறியை சாடியிருக்கிறுர். அப்போது அதே கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த புத்தளம் நகரசபைத் தலைவர் ஜனப் எஸ். எம். எம். இபுனு அவர்களின் கண்களை அங்கே புதிய பஸ் நிலையத்திற் காணப்பட்ட தனிச்சிங்களப் பெயர்ப்பலகைகள் உறுத்திக்கொண்டிருந்திருக்கின்றன.

தனக்கு பேசும் வாய்ப்பு கிடைத்தபோது, துணிவுடன் இதை அமைச்சருக்குச் சுட்டிக்காட்டிய ஜனப் இபுனு, 'சிங்களம் மட்டும்தானா இனதுவேஷ ஒழிப்பின் இலட்சணமா'' என்று ஆணித்தரமாக அமைச்சரை நோக்கிக் கேட்டிருக்கிறர். தமிழ்பேசும் மக்கள் புறக்கணிக்கப்படுவதாக முழக்கமிட்டிருக்கிறுர். இஸ்லாமியரான ஜனப் இபுனுவுக்கு வந்த இந்தத் துணிவும், தமிழ்ப்பற்றும், தமிழர்கள் எத்தனையோ பேரிடம் இன்று காணப்படவில்லையே! [illegible] ஜனப் இபுனு [illegible] பாரா ட்டுகிறேம்.

---

### தனிநாடு உருவாவ...

—7-ம் பக்கத் தொடர்

இரு பக்கத் தலைமைச் சட்டத்தரணிகளும் தொகுப்புரை நிகழ்த்தினர். இறுதியில் நீதிபதி அவர்கள் இரு பக்க வாதங்களையும் ஆராய்ந்து சுமார் 2.15 மணியளவில் தமது நீண்ட தீர்ப்பைப் படிக்கத் தொடங்கினர். 2,45 மணியளவில் தமது தீர்ப்பை வாசித்து முடித்த அவர் பிரதிவாதிகளின் வாதங்களை ஏற்றுக் கொண்டு குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்ட தமிழ்ஈழப் பிரிவினைவாதிகள் குற்றமற்றவர்கள் எனக் கூறி அவர்களை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

(நீதிபதி தேவனின் தீர்ப்பின் விபரம் — பின்னர் வெளிவரும்)

---

# தமிழ்ப்படங்களுக்கு தடைவிதிக்கும்படி சிங்கள நடிகர்கள் கோரிக்கை!


இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தற்போது இறக்குமதி செய்யப்படும் அற்ப சொற்பத் தமிழ்த் திரைப் படங்களையும் இந்தித்திரைப் படங்களையும் அறவே தடைசெய்ய வேண்டுமென சிங்கள நடிகர்கள் வெறிக்கூச்சல் எழுப்பியுள்ளதுடன் இதற்காக இயக்கமொன்றை நடத்தவும்போவதாக அறிவித்திருக்கிறுர்கள். இந்தத் தமிழ்த் திரைப்பட எதிர்ப்பு இயக்கத்துக்கு பிரபல சிங்கள நடிகரும், யூ. என். பி. ஆதரவாளருமான காமினிபொன்சேகா தலைமை தாங்கவிருக்கிறுராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாடு உருவாவதற்கு

# பூகோள அமைப்பு முக்கியமல்ல!

# வரலாறே நாடுகளை உருவாக்குகிறது!



பொன். கணேசமூர்த்தி

# யாழ் வளாக வழக்குரைமன்றில்

# பொன்கணேசமூர்த்தி முழக்கம்!

**திரு.** சிவதாசனைத் தொடர்ந்து திரு. சிவாசுப்பிரமணியம தமிழ்ஈழப் பிரிவினை வாதிகள் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தினுர். அவர் பின்வருமாறு கூறினுர்:—

"நான் மானசீகமாகத் தமிழ்த் தலைவர்களையே குற்றக் கூண்டில் நிறுத்துகிறேன் இவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கத் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத தவறினுர்கள்.

"பண்டா செல்வா ஒப்பந்தத்தின்போது பண்டார நாயக்காவின் கரத்தைப் பலப்படுத்த இவர்கள் முயற்சிக்காது சிறீப் போராட்டம நடத்தினுர்கள். இதிலிருந்து இவர்கள் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை என்பது தெரிகிறது. பாடசாலைத் தேசியமயத்தை எதிர்ப்பதில் முன்னின்றனர். இதனுல் பேச்சுவார்த்தையெனும் கட்டத்தில் நின்ற சிறீ. சு. கட்சி தமிழரசுக் கட்சி உறவில் விரிசல் ஏற்பட்டதான்றியது.

"கத்தோலிக்கத் திருச்சபை, ஐ. தே. கட்சி, தமிழரசுக்கட்சி இவை பாடசாலைத் தேசியமயமாக்கப்படப் போகின்ற அண்மைக்காலங்களில் நடாத்திய கூட்டங்களை ஒரே திகதியில் (1961 ஜனவரி 2ம் திகதி) நடாத்தியமை தமது வர்க்க நலனைப் பாதுகாப்பதறகென்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. இவை தற்செயலாக நடந்ததென்று கூற முடியவில்லை. வர்க்கநலனைப் பேணுவதில் அவர்கள் ஒன்றுபட்டனர் என்றே ஊகிக்கிறேன். இவர்களது நடவடிக்கைகள் ஐ. தே. கட்சியின் பக்கமாகவே சமதர்மத்திற்கு எதிராகவே இருந்ததென்பதைப் பல சம்பவங்கள் காட்டுகின்றன.

"இனித் தத்துவார்த்த ரீதியில் பேசிய எதிரிதரப்புச் சட்டத்திதரணிகளுக்குத் தத்துவார்த்த ரீதியில் பதிலளிக்க விரும்புகின்றேன். இங்கே தமிழ்ஈழம் பிரியவேண்டுமென்பவர்கள் இவர்களது பிரதேசத்திற்கு வெளியே பெருநதொகையாக வாழும் தமிழர்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. தமிழ் ஈழத்தே வாழும் மக்களிடையே சமத்துவமின்மையைக் காண்கிறேம். எனவே பிரிவினை எல்லாத் தமிழர்களையும் ஒன்றிணைக்காது. தமிழர் தலைவர்கள் கடந்த காலங்களில் முதலாளித்துவத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டுத் தமக்குள் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். எனவே இவர்கள் குற்றவாளிகள்."

## கணேசமூர்த்தி வாதம்

இதைத் தொடர்ந்து திரு. பொன். கணேசமூர்த்தி தனது வாதத்தை ஆரம்பித்தார். அவர் கூறியதாவது:—

"வாதிகள் தரப்பில் வாதிட்ட சட்டத்தரணி திரு. சிவாசிப்பிரமணியம் அவர்கள்," தமிழ் ஈழம் பிரிந்தால், வாழும் பொருளாதார வளமின்றி தமிழ் ஈழம் அழிந்துவிடும். அதனுல் தமிழ் ஈழம் பிரிவது கூடவே கூடாது" என்றுர். இதை நினைக்கும்பொழுது ஓநாய் வடித்த கண்ணீர்க் கதைதான் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது.

"எலியொன்றை உணவுக்காகப் பிடித்து வைத்திருந்ததாம் ஒரு பூனை. பூனையிடமிருந்து விடுபடத் துடித்த எலியிடம் அது கூறியதாம் "நான் உன்னை வெளியே விடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனுல் வெளியே விட்டால் உன்னைப் பாம்பு பிடித்துவிடுமே" என்று! வாதி தரப்புச்சட்டத்தரணிகளின் வாதமும் இந்தப்பூனையின் வாதம் இதைப்போலத்தான் இருக்கின்றது.

## ஆண்டபரம்பரை நாம்

16ம் நூற்றுண்டில்போர்த்துக்கேயரிடம தமது இறைமையை இழந்த தமிழ்க் குலம் 1833ம் ஆண்டு கோல்புறுக் ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய நிர்வாக வசதியினை பொருட்டு தமிழ் ஈழத்தையும், சிங்களதேசத்தையும் ஆங்கில ஏகாதிபத்தியம் ஒன்றுக இணைக்கும் வரை, தனித்தமிழ் ஈழமாகவே இருந்தது என்பதற்கு வரலாற்றுச்சான்று உண்டு, அது பற்றிய ஆவணங்களை எனது தரப்புத் தலைமைச் சட்டத்தரணி சமர்ப்பித்துள்ளார். 1972ம் ஆண்டின் குடியரசு யாப்பு தமிழ் மக்களின் சம்மதமின்றி தான்தோன்றித் தனமாக வரையப்பட்ட ஒன்று. அதைத் தமிழ்மக்கள் ஏற்கவில்லை. இதை 1975ம் ஆண்டு மாசி மாதம் 6ந் திகதி நடந்த காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தமிழ் மக்கள் ஆணித்தரமாக நிலைநாட்டியிருக்கிறுர்கள். பெரும்பான்மை பலத்தைக்காட்டி, படைபலத்தைக் கூட்டி, தமிழ் மக்களை அடிமைகளாக வைத்து ஆண்டுகொண்டிருட்பவர்கள், இழந்த தமது தாயகத்தை மீட்டுக் கொள்ளத்துடிக்கும் தமிழ் வீரர்களைச் சிறையிலே பூட்டிவிட்டு, குற்றவாளிகள் என்று கூறுவதும், 'பொருளாதார வளமின்றித் தமிழர் ஈழம் சிதைந்து விடுமென்பதாற்ருன் தமிழ் ஈழம் கேட்பது குற்றம் என்று கூறுவதும் பூனையின் இடக்கு வாதம் தானென்பதில் ஐயமுண்டா?

வாதிதரப்பினர் கூறுவது போல் "தமிழ் ஈழமும், சிங்கள ஈழமும் வரலாற்று ரீதியில், எந்தக் காலமும் பிரிந்திருந்ததில்லை" என ஒரு வாதத்துக்காக வைத்துக் கொண்டாற் கூட, ஒரு தேசிய இனத்துக்குத் தனது பாரம்பரியப் பண்பாடுகளைக் காத்துக் கொள்ளப் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை உண்டு என்று [illegible]

—சோஷலிசக் கோட்பாட்டின்படி, தமிழ் ஈழம் பிரிந்து தானுகவேண்டும். அந்த நிலைக்குத் தமிழ் மக்கள், சிங்கள ஏகாதிபத்திய அரசினுற் தள்ளப்பட்டிருக்கிறுர்கள்.

## வரலாறு தயாராகி விட்டது

வண. மைக்கேல் ஓப் லோங்கர் என்பவர் ஐரிஸ் விடுதலை இயக்கமான 'ஸின் பீன்' இயக்கத்தின் துணைத் தலைவர். இந்த மாமேதை ஓரிடத்தில் கூறுகிறுர்.

"National and geographical boundaries scarcely ever coinside Geography would make one nation of Spain and Portugal; History has made two of them. Geography did its best to make one nation of Norway and Sweden. History succeeded in making two of them. Geography has nothing to say the number of nations upon the North American continent."

இதன் பொருளை வாதி தரப்பின் படித்தறிந்த சட்டத்தரணிகள் புரிந்துகொள்ளுவார்கள் என்று நம்புகின்றேன்.

பூகோளமும், வரலாறும் ஒன்றை ஒன்று சந்திக்காத ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். பூகோள ரீதியில் ஒன்றுயிருந்த நாடுகளை, வரலாறு இரண்டாகவோ, மூனருகவோ பலதாகவோ ஆக்கி வரலாறு வெற்றிகண்டிருக்கின்றது. ஸ்பெயினையும் போர்த்துக்கலையும் வரலாறு இரண்டு நாடுகளாக்கியது. நோர்வேயையும் சுவீடனையும் அதுவே வெவ்வேறு நாடுகளாக்கியது. வடஅமெரிக்காக் கண்டத்தையும் வரலாறே வேறுவேறு பல நாடுகளாக்கியது.

இதை நான் ஏன் சொல்கின்றேனென்றுல், இலங்கை இருவேறு நாடுகளாக என்றுமே இருந்ததில்லை என்ற வாதிதரப்பினரின் போலி வாதத்தை, ஒரு வாதத்துக்காக ஏற்றுக்கொண்டாலும், அந்த இலங்கையை சிங்கள—தமிழ் ஈழங்களாக இருவேறு நாடுகளாக்க வரலாறு தயாராகிவிட்டது என்பதை உணர்த்துவதற்காகவே தமக்கென ஒருநாடு இல்லாவிட்டால், தன்மானமற்று நாய்களைப்போல் நரிகளைப் போல, மாய்கின்ற நிலைதான் தமக்கு என்று எனது கட்சிக்காரர்கள் மனப்பூர்வமாக நம்புவதாலேயே, [illegible] இன்று குற்றக் கூண்டிலே நிறுத்தியிருக்கிறது.

## அணிசேரா நாடுகளின் தீர்மானம்

இந்த நிலைக்குத் தமிழ் மக்கள் ஏன் தள்ளப்பட்டார்கள்? கௌரவ நீதிபதியவர்களே! அவர்கள் பட்ட இன்னலை, அனுபவித்த வேதனைகளைக் கருணையோடு கவனித்துப்பாருங்கள்.

*1961, 1964, 1970*ம் ஆண்டுகளிலே முறையே பெல்கிறேட், கெய்ரோ, லூசாகா ஆகிய நகரங்களில் 3வது உலகமெனக் கூறப்படும் அணிசேரா நாடுகளின் மாநாடு நடைபெற்றது. 3வது உலக நாடுகளின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா என்பதையும் உலகறியும் இந்த அணிசேரா நாடுகள் எடுத்த முக்கிய தீர்மானங்கள் என்ன?

1. Respect of Sovereignity and Intergrity.

2. Peaceful co-existence and non-aggression.

3. Anti-racialism.

4. Anti-imperialism.

5. Anti-colonialism.

இந்த ஐந்து பிரகடனங்களில் ஒன்றையாவது சிங்கள அரசு கடைப்பிடிக்கிறதா?

இறைமைக்கும், மேன்மைக்கும் மதிப்பு, சமாதான வாழ்க்கை, ஆக்கிரமின்மை இனவாத, ஏகாதிபத்திய வாத, குடியேற்ற வாத எதிர்ப்பு—இவற்றை உண்மையாக சிங்கள அரசு கடைப்பிடித்திருந்தால் எனது கட்சிக்காரர் பிரிவினை கேட்பதில் ஒருவேளை குற்றமாகியிருக்கக்கூடும். ஆனுல், இவற்றை சிங்கள அரசு கடைப்பிடிக்கவில்லை.

## சிங்கள ஏகாதிபத்தியக் கொடுமைகள்

சிங்களமொழியே அரசமொழியென்று செந்தமிழைச் சீர்குலைத்தது; பௌத்தமே முதன் மதமென்று சட்டமியற்றி தமிழர்கள் தன்மானத்தைப் பழித்தது, மலைநாட்டுத் தமிழ் ஈழப் பொருளாதாரத்தின் அச்சாணிகளை, நாடற்றவர்களாக்கி, கப்பலிலே ஏற்றி நாடுகடத்தியது; தரப்படுத்தல் என்னும் கொடுமையான கல்வித் திட்டத்தால், தமிழ் மக்களின் கல்வியை அநியாயமாகப் பறித்தது; தமிழ் உரிமை கேட்டவர்களைக் காரணமின்றிச்சிறைக் கோட்டத்திலே அடைத்தது; *1958, 1961, 1974*ம் ஆண்டுகளில் இனவாதவெறியாட்டம் ஆடித் தமிழ் மக்களின் உயிரை அநியாயமாகப் பறித்தது;

புத்தளத்திலே முஸ்லீம்மக்களைப் படுகொலை செய்தது; செம்மணியிலே அப்பாவி வாலிபன் ஒருவனை அநியாயமாகக்கொன்றது; தமிழாராய்ச்சி மாநாட்டின்போது 9 தமிழர்களைக் கொன்றுகுவித்தது; தமிழ் மங்கையர் மார்புகளிலே சிங்களச் சிறிகுத்தியது; தமிழ்த்தலைவர்களை அடித்து நொருக்கியது; வேலைவாய்ப்புகளிலிருந்தும் பிறதுறைகளிலிருந்தும், தமிழர்களைத் திட்டமிட்டு அகற்றியும், வாய்ப்புக்கொடுக்காது ஏமாற்றியும் வருவது; திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழர் தம் பாரம்பரியப் பூமிகளை ஆக்கிரமிப்பது;

இவையெல்லாம் சிங்கள அரசு செய்துவரும் அட்டூழியங்கள்—இதை அவர்கள் சோஷலிசம் என்று கூறுவார்கள். கௌரவ நீதிபதியவர்களே; இந்த அநியாயங்களையெல்லாம் செய்கின்ற சிங்கள அரசுதான் இந்நீதிமன்றத்தின் முன்னே குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டுமே தவிர, தாம் அடைந்துவருகின்றஇன்னலிருந்து மீண்டு, தமக்கென்றேர் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் துடிக்கும் எனது கட்சிக்காரரல்ல...

## பிரிந்தால் வாழுமா?

தமிழ்நாடு பிரிந்தால் பொருளாதார வளமிருக்குமா? இல்லையா? என்பது அர்த்தமற்ற கேள்வி. தமிழ்நாடு, எனதுகட்சிக்காரரைப் பொறுத்தவரையில் தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது. குனிந்து கும்பிட்டு வாழ்வதிலும் நிமிர்ந்து நின்று சாவதையே எனது கட்சிக்காரர் விரும்புகிறுர்கள். அடுத்த வீட்டுக்காரரான சிங்களவர்களின் அனுதாபத்தை அவர்கள் வேண்டவில்லை.

நவீன மார்க்சிசவாதி (BARREN)பரன் கூறுகிறுன்" அடிப்படை ஒற்றுமையின் பின்னரே பொருளாதார சுபீட்சத்தைக் காணமுடியும்" என்று. தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தில் ஒன்றுபட்டால, பாலைவனத்திலே பசுமைப் புரட்சி செய்த இஸ்ரேலியரைப்போல— பொருளாதாரத்திலே நிமிரமுடியும்!

திரு. கணேசமூர்த்தியின் வாதத்தைத் தொடர்ந்து

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி நாடகம்

கண்டக்டர்— எங்க போறுய்?

பிரயாணி— ஆஸ்பத்திரியடிக்கு ஒன்றரை டிக்கட் தாங்க.

கண்டக்டர்—எழுபத்தஞ்சு சதம்தா......

பிரயாணி— இந்தாங்க...

கண்டக்டர்— ஏன் சில்லரையில்லையா?

பிரயாணி— இல்லைங்க இதுமட்டும்தான் இருக்கு...

கண்டக்டர்— இந்தக் காசு எடுக்க ஏலாது.

பிரயாணி— ஏன்?

கண்டக்டர்— இதில கையெழுத்து இருக்குது.

பிரயாணி— அதுக்கு நான் என்னங்கசெய்ய நானு எழுதினன்?

கண்டக்டர்— எனக்கு அதுபற்றித் தெரியாது இந்தக் காசை எடுக்கக் கூடாது என்று எங்களுக்கு உத்தரவு.

பிரயாணி— இதென்னய்யா அநியாயம் இது இப்ப செல்லுபடியாகும் என்று பேப்பரில போட்டிருக்கிறுர்களே.

கண்டக்டர்— பேப்பரில போட்டிருந்தாப்போல? எங்களுக்கு மேலிடத்து உத்தரவு இப்படி எழுதின காசுகளை 'வாங்கவேணும் என்று. உன்னட்டவேற காசிருந்தால் தா...... இல்லாட்டி இறங்கு கீழ.

பிரயாணி— வேற காசு கொண்டுவரஇல்லையே: என்னட்ட ஆக உள்ளது இது மட்டும்தான். ஆஸ்பத்திரி பூட்டுற நேரமாச்சுது பிள்ளைக்குக் கடுமையா காய்ச்சல் காயுது, கிடச்ச பஸ்ஸிலேயும் போகமுடியாட்டி இது என்னய்யா......

கண்டக்டர்— நாங்க என்னப்பா செய்யிறது பேப்பரில விளம்பரம் தடுக்கிறவங்களும் அவங்கள்தான் — எங்களை எடுக்கவேணும் என்று கட்டளையிடுறவனுகளும் அவங்கள்தான். உங்களுக்குத் தெரியாது நேற்று நான் கொண்டுபோன காசுகளில எழுதி இருந்தது என்பதற்காக டிப்போவில காசை எடுக்கமாட்டன் என்று சொல்லிட்டாங்கள். பிறகு நான் அந்தக்காசை பொலிசில கொண்டுபோய் கட்டினனுன். இப்ப நீங்க சொல்லுங்க நாங்கள் பிரயாணிகளுக்காக இரங்கிறதா, இல்லாட்டி எங்களுக்குமேல இருக்கிறவனுக்கு அமையுறதா?

பிரயாணி— அது சரி ஐயா பொதுமக்களுக்கு ஒருமாதிரி பத்திரிகையில அறிக்கை விட்டிட்டு உங்களுக்கு இப்படிச்சொல்லி வைக்கிறதால பொதுமக்கள் எவ்வளவு கஷ்டப்படநேருது — நல்ல அரசாங்கமும் நல்ல நிர்வாகமும்தான்...

கண்டக்டர் — அதைப் பற்றி என்னட்டச் சொல்லி என்ன பிரயோசனம். வேணுமென்றுல் என்னுடைய பேரையும், நம்பரையும் தாறன். இப்படி, எழுதின காசை ஏற்கமாட்டாராம என்று யாரும் யாருக்கு வேண்டுமானலும் முறைப்பாடுசெய்யலாம் அவ்வளவுதான் என்னுல செய்யமுடியும். இப்போ நேரத்தைச் சுணக்காமல் தயவுசெய்து கீழ இறங்கு.

பிரயாணி— பிள்ளையை அவசரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேணும் ஐயா.

கண்டக்டர்— பேசவேண்டாம் இறங்கு கீழ ...உங்களைப்போல ஆயிரம் பேர் வருவினம் ... எல்லாருக்கும் மறுமொழி சொல்லிமினக்கிட நேரமில்ல ... இறங்கு கீழ...

— அற்லஸ்

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்த வழி! இலையான், கொசு, நுளம்பு, பூச்சி, புழு உபத்திரவம் நீங்க ஒரு வழி!!
நீம் சுகாதார தூபம் பாவிப்பதே.
ஒரு பைக்கற் 25 சதம் மட்டுமே.
**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**

**செல்லமகால்**
சிவாஜி - சௌகார் ஜானகி நடித்த
**மகாகவி காளிதாஸ்**
22-ம் திகதி முதல் **கோமாளிகள்**

**ரீகல்** மட்டக்களப்பு
முத்துராமன், கே. ஆர். விஜயா நடித்த **கஸ்தூரி விஜயம்**

**தாஜ்மஹால்** (மாத்தளை) 4வது வாரம்
**நினைத்ததை முடிப்பவன்**

**கிங்ஸ்** பதுளை 3வது வாரம்
**அவள் ஒரு தொடர் கதை**

4வது வாரம்
**கெபிட்டி**
சிவகுமார், ஜெயசுதா, ஸ்ரீப்பிரியா, கமலஹாசன், தேங்காய் சீனிவாசன், அசோகன், மனோரமா, டி. கே. பகவதி, பண்டரிபாய், ஜயலக்ஷ்மி —நடித்த
**பட்டிக் காட்டு ராஜா** ஈஸ்மென் கலர்
கதை, வசனம், டைரக்ஷன்
கே. சண்முகம்

**கிங்ஸ்லி—லிடோ 5-வதுவாரம்**
(கொழும்பு) (யாழ்நகர்)
சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன் முத்துராமன்,
மற்றும் பலர் நடித்த
**அவன் தான் மனிதன்**
(ஈஸ்ட்மென் கலர்)
திரைக்கதை டைரக்ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.

**பிளாசா** 10வது வாரம்
சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி.கே.ராமசாமி,
— நடித்த —
**தங்கப் பதக்கம்**
(ஈஸ்மன் கலர்)

**கெப்பிட்டல்**
கல்யாண குமார் — தேவிகா நடித்த -
**நெஞ்சம் மறப்பதில்லை**
எதிர்பாருங்கள்
தேவரின் **திருவருள்** ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org